V/ குன்னெவான் அ.த.க 19/5

# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் : 12 இதழ் : 3 பெப்ரவரி, 1960 விலை சதம் : 15



# அட்டைப் படம்




இலங்கையின் வடமேற்குக் கரையில் உள்ள தீவுதான் மன்னார் என அழைக்கப்படுகின்றது. தென்னிந்தியக் கரையில் தோணித் துறையில் இருந்து ஆரம்பிக்கும் கடற்பாறைத் தொடர் மன்னார்த் தீவுவரை தொடர்புற்றிருக்கிறது. சீதா பிராட்டியாரைச் சிறைமீட்கும் பொருட்டு இலங்கைக்கு வந்த இராமபிரான் இவ்வழியாக நடந்து வந்திருத்தல்கூடும் எனக் கருதப்படுகிறது. மன்னாரில் அலுவலுள்ளோர் சிறுபரவைக் கடலைத் தாண்டிச் செல்லும்பொழுது தமது உடைகளை மன்னிச் செல்வது வழக்கமாதலின், மன்னினார் என்பது மன்னார் என மருவியதென்பர். மன்னார் என்பது பகைக்குரிய இடம் அல்லது பகைவர் இடம் எனப் பொருள் கொள்வாருமுளர். இதன் உண்மைக் கருத்தினை ஆராய்ச்சியாளர் வெளியிடுதல் விரும்பத் தக்கது. இலங்கையிலுள்ள பண்டங்கள் ஏற்றுமதி செய்யப் படுதற்கும், அந்நியநாட்டுப் பண்டங்கள் இலங்கையில் வந்து இறக்குமதியாதற்கும் மன்னார் பாரிய பண்டசாலையாகப் பண்டைக் காலத்தில் விளங்கியது. மன்னாரில் பனை மரத்தைப் பண்டைக் காலந் தொடக்கம் பேணிவந்தார்கள். அந்நியர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பெற்ற அழகிய சிறு கோட்டை ஒன்று இன்றும் காணப்படுகின்றது. பெருக்குமரம், இப்பகுதியில் சிறப்பாகக் காணப்படுகின்றது. சரித்திரப் பிரசித்திபெற்ற இவ்வழகிய தீவில் இடைக்கிடை தண்ணீர்க் கஷ்டம் ஏற்படுவதுண்டு. அப்பொழுது தண்ணீர் எடுப்பதற்காகப் பெண்கள் குடத்துடன் நெடுந்தூரம் செல்லவேண்டி ஏற்படுகிறது. இத்தகைய காட்சியொன்றினையே அட்டைப்படம் சித்திரிக்கின்றது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுதந்திர தின விழா .. .. .. .. | 3 |
| 2. | நல்லாரிணக்கம் .. .. .. .. | 6 |
| 3. | எங்கள் கடமை .. .. .. .. | 9 |
| 4. | காகிதத் தொழிற்சாலை விற்பனையறை .. .. .. | 16 |
| 5. | இலங்கைச் சரித்திரக் கதைகள் .. .. .. | 21 |
| 6. | நூல்நிலையப் பிரசாரம் .. .. .. .. | 25 |
| 7. | மோட்டார் தொழிற்பயிற்சிக்கூடம் .. .. .. | 29 |
| 8. | இலங்கைக்கு ஒரு ரயர், ரியூப் தொழிற்சாலை .. .. .. | 31 |


J.N. R 8238—5,508 (2/60)



சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் இலங்கைப் பிரதமர் சொற்பொழிவாற்றுகிறுர்.

# சுதந்திர தின விழா


## சுதந்திர சதுக்கத்திலே 5,000 மாணவர்களின் உடற்பயிற்சி விளையாட்டு

### இராணுவ அணிவகுப்பு காலிபேஸ் திடலில்

இவ்வாரம் நாடெங்கிலும் சுதந்திரதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலையில் ஆலயங்களில் மணியோசை முழங்க விசேஷ பூசைகளுடன் சுதந்திரதின விழா ஆரம்பமாகியது.

பிரதமர் திரு. டபிள்யு. தகநாயக்கா காலையில் பொல்வத்தை பௌத்த கோயிலுக்குச் சென்று மலர்வைத்து புத்தரை வணங்கினுர்.

சுதந்திர சதுக்கத்திலே உடற் பயிற்சி விளையாட்டு களைக் காட்டுவதற்காக 5,000 பள்ளி மாணவ மாணவிகள் வந்து நிறைந்தனர். காலை 7.30 மணியளவில் செனெற் சபைத் தலைவர் சர். சிறில் டி சொய்சாவும், பிரதம நீதியரசர் திரு. எச். எச். பஸ்நாயக்காவும் வந்துசேர்ந்தனர். சிறிது நேரம் கழித்து பிரதமர் தகநாயக்காவும், மகாதேசாதிபதி




சுதந்திர தினத்தன்று காலிபேஸ் மைதானத்தில் மகாதேசாதிபதி சேர். ஒலிவர் குணத்திலக்கா அவர்கள் படை அணிவகுப்பைப் பார்வையிடுகின்றார்.

சர். ஒலிவர் குணத்திலக்காவும் வந்து சேர்ந்தார்கள். மகாதேசாதிபதி வந்திறங்கியதும் மங்கள பேரிகை முழக்கி வரவேற்கப்பட்டார்.

மகாதேசாதிபதி, பிரதமர், செனெற் சபைத் தலைவர், பிரதம நீதியரசர், சுகாதார அமைச்சர் திரு. ஸ்டான்லி சொயிசா ஆகியோர் மேடையில் தத்தம் ஆசனத்தில் அமர்ந்ததும் சாரணர் அணி வகுப்பு நடைபெற்றது. அதன் பின்னர் பாடசாலைப் பிள்ளைகளின் தேகப்பயிற்சி விளையாட்டு நடைபெற்றது.

இவ்விளையாட்டுகள் நடைபெற்று முடிந்ததும், பிரதமர் திரு. டபிள்யு. தகநாயக்கா அவர்கள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் சொற்பொழிவாற்றினர்.



சுதந்திர தினத்தன்று காலிபேஸ் மைதானத்தில் நடைபெற்ற படை அணிவகுப்பின்போது, இலங்கை றேயல் கடற்படை மகாதேசாதிபதி அவர்களுக்குத் தனது மரியாதையைச் செலுத்துகின்றது.

சுதந்திரதின விழா

# பிரதமரின் பேருரை

சுதந்திர சதுக்கத்திலே பிரதமர் திரு. டப்ளியு. தகநாயக்கா ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் பேசும் பொழுது சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் ஒரு ஐக்கிய சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட வேண்டுமெனக் கூறினர். அவரது பேச்சு கீழே தரப்படுகிறது :

"நாம் விடுதலையடைந்து தற்பொழுது பன்னிரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. இப் பன்னிரண்டு வருடங்களும் நமக்குப் பலவழிகளிலும் வெற்றியையும், முன்னேற்றத்தையும் அளித்த வருடங்களாகும். எம் மக்களிடையே மண்டிக்கிடந்த அறியாமையையும், நோயையும், வறுமையையும், அகற்ற முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அவர்களின் சேம நலன் குறித்துப் பாடுபடுவதிலும் அரசாங்கம் கருத்தைச் செலுத்திவந்திருக்கிறது. வசதிக்குறைவான மக்களின் அபிவிருத்திக்காக விசேஷ சிரத்தை காண்பிக்கப்பட்டு வருகிறது. சாதாரண மனிதனின் யுகம் உதயமாகிவிட்டதென்பது முற்றிலும் உண்மையாகும்.

நாமும் கஷ்டங்களை அனுபவித்திருக்கிறோம். நாட்டின் விடுதலைக்காகப் போராடியபொழுது எம்மிடையே நிலவிய ஐக்கியம் கடுமையாகப் பரீட்சிக்கப்பட்டது. எமது எதிர்காலத்திற்குரிய கடமை யாதென்பது தெளிவாகும். ஒழுங்கை நிலைநாட்டு

(8 ம் பக்கம் பார்க்க)

# நல்லாரிணக்கம்

திரு. சு. பெரியதம்பி அவர்கள்

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு—**திருக்குறள்.**

மனிதர் பொறிபுலன்களும் மனமும் எதையெதைச் சேர்ந்து நிற்குமோ அவ்வச் சேர்க்கை பற்றியே வாழ்க்கையும் விசேட வியல்பெய்தி விளங்கும். பயிற்சி சகவாசங்களாலும் தியான பாவனைகளாலும் உயர்வெய்தற்பாலது மக்களொழுக்கம். சிந்தை சொற் செய லென மூவகையிற் பயிற்சி நிகழும். இனி, மனமொழிமெய்கள் எப்பொருட்சார்பாகப் பயிலுமோ அப்பொருட்சார்பே வாழ்க்கையின் பெருமை சிறுமைக்குக் காரணமாய் நிலவும்; ஆதலின் சிந்தைசொற் செயல்கள் நற்சார்பினாற் றூய்மை யெய்தியவழியே நல்லொழுக்கம் நிலைபெறுதலும் வாழ்க்கை சிறப்படைதலும் கூடும். சிந்தனையின் விளைவாகவே சொற்செயல்கள் தோன்றுதலும், சிந்தனைமுறுகி யொருமுகப்பட்டு உறுதி பெற்றவழியே தியானபாவனைகள் நிகழ்தலும் உண்டு. ஆயினும், சாமானிய மனிதவாழ்க்கையில் சிந்தனைகள் ஏற்றபெற்றி சொற்செயல்களாகப் பிரதிபலித்தாலன்றி முயற்சிவடிவினதாகிய மனித வாழ்க்கை சிறப்படைதலுமில்லை. சித்தம் ஸ்திரப்பட்டுச் சீரியவாழ்க்கைக்குச் சிறந்தகருவியா யமைவது மில்லை. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பினதாதலின், தம்முள் ஒற்றுமைப்பட்டு நிகழ்தற் பாலனவாகிய சிந்தை சொற் செயல்கள் நற்சார்பிற் பயின்றாலன்றி வாழ்க்கை சிறப்படையமாட்டாது. ஆகவே, "சென்றவிடத்திற் செலவிடாதொரீஇ நன்றின் பாலுய்ப்ப" தாகிய விசேட அறிவு பெற்ற மக்கள்தம் சிந்தைசொற் செயல்களை நற்சார்பிற் பயிலவிடுங் கடப்பாடுடையர். எனவே, மக்கள் நல்வாழ்வடைவதற்கு நல்லினஞ் சேர்தல் உத்தம சாதனமா யமையுமென்பது நன்கு விளங்கும். நல்லினர் சேர்தல் எவ்வாறு வேண்டப்படுமோ அவ்வாறே சிற்றினஞ் சேராமையும் விலக்கப் படுமெனவுணர்க. அஞ்ஞானமும் தீயொழுக்கமும் போற்றிவாழும் சிறியோர் தம்மைச் சேர்ந்தோர் அறிவைத்திரித்து அவ்வறிவின் விளைவாய் நிகழும் இச்சை செயல்களையும் தீநெறிக்கட் செலுத்தித்தமக்கும் பிறர்க்குங் கேடு விளைக்கும் தன்மையின ரென்பது அறியத்தக்கது. பலர் ஒருங்கு கூடிவாழுஞ் சமுதாயவாழ்க்கையிலன்றி மனிதர்பால் அறிவொழுக்கங்கள் விருத்தியாதல் சாலாதாதலின், மனிதன் தனக்கோர் இனத்தை நாடிநிற்றல் இயல்பாகும். ஆகவே, நல்லினஞ் சேர்தலும் சிற்றினஞ்சேராமையும் வேண்டப் படுவனவாகும். தம்மிணக்கத்தால் உயிர்க்குறுதி பயக்கும் நல்லார் யாரென்பதும் அவர் இணக்கம் மனிதர்க்குத் துன்பம் நீக்கி யின்பந் தரும் முறையாது என்பதும் சிறிதாராயத்தகும்.

நல்லதனன்மையும் தீயதன் றீமையும் நுனித்தறியும் பகுத்தறிவுள்ள மனிதருள் நல்லார்தான் யாரெனில், வாழ்க்கையில் அடையும் பிரயோசனங்களின் ஏற்றத்தாழ்ச்சி கண்டு பரமப்பிரயோசன நிச்சயஞ் செய்ததனையடைந்த வநுபவமுதிர்ச்சியாற் சிந்தைசொற் செயல்களிற் றூய்மைமிக்குத் தாம் பெற்ற பேறிவ்வையகமும் பெறுகவென்னுஞ் சீவகாருண்ணிய நெறிநின்று உபகரிக்கும் சிவநேசச் செல்வரே யவரென்க.

மரணபவங்களான புனலையுடையது
மதியை விழுங்குகாம வரவு பெரியது
கரணவொழுங்கருத விடயவிரைநுகர்
கரண மொடியங்குமீன மிகவுமுரள்வதே
பெருமித மென்றுகூறு பெருமையுடையது
பிணிக ளெனுங்கெடாத புலவு கமழ்வது
வருமிட ரின்பமான திரைகள் பொருவது
மனமெனும் வஞ்சராச மகரமுறைவதே

(சசிவன்னபோதம்)

என்று அறிவாற்றல்கள் மிக்க பெரியோரும் கரையறியாது கலங்கிப் பலவாறுகக் கையற்று நின்று கதறச் செய்யும் சம்சார சாகரத்தை, நித்தியாநித்திய விவேகமும் அந்தக்கரண சுத்தியுமுடையராய் உண்மை ஞானம்கைவந்து பரமப் பிரயோசனப்பிராப்தி பெற்றபெரிய துணைக் கொண்டே கடத்தல் முடியும். "தவராஜசிங்கம்" என்றும் "சிவராஜயோகியர்" என்றும் தமிழ்நாடும் சைவ நல்லாரும் போற்றும் பற்றறத்துறந்த ஞானப் பட்டினத்தடிகளே, "நல்லாரிணக்கமும் நின் பூசை நேசமும் ஞானமுமே யல்லாது வேறு நிலையுளதோ" என்றும், "அடியா ருறவு மரன் பூசை நேசமுமன்புமன்றிப்படிமீதில் வேறு பயனுளதோ" என்றும், "தோடுண்டகண்டனடியார் நமக்குத் துணையு முண்டே" என்றும், இச்சிவனடியாரைத் தமக்குக் களைகணுகக் கொண்டாரென்றால், இப்

பெரியாரிணக்கம் மக்கள் நல்வாழ்வெய்துதற்குப் பெரிதும் வேண்டப்படு முத்தம சாதனமென்று மேலும் மேலும் எடுத்துக்கூறுதல் மிகையாகும்.

சைவநல்லார் மனமொழிகளிற் றூய்மையுடையவர்; சிவத்தையன்றிச் செகத்தை நோக்காதவர்; சிவோகம்பாவனை முதலிய சாதனைகளாற் சிவமாந்தன்மையைத் தம்பாற் பெற்றவர். இவரோடிணங்கியிவர் சொற்கேட்டு மிவர் ஏவியன செய்தும் வாழ்வோர், தம் சிந்தனையெல்லா மிவர் சொல்லிலும் செயலிலும் செல்லுதலால், தாமும் சிந்தைசொற் செயல்களிற் றூயோராவர். சிந்தனை ரூபமான அறிவின் விளைவாகவே சொல்லும் செயலும் நிகழும். பெரியோர் சொற்செயல்களே யிவர் அறிவுக்கு விடயமாக நிலைபெறுதலின் அவ்வறிவின் விளைவாக நிகழுமிவர் சொற்செயல்களும் தூய்மைபெற்றே விளங்கும். இவ்வாறு திரிகரண சுத்திபெற்றவழி யுண்மைஞானம் கைவந்து சிவமாதல் ஒரு தலையாதலின், அடியாருறவால் அடையாத நன்மையில்லையென்றே கூறத்தகும். "மறமலி யுலக வாழ்க்கையும் வேண்டும் வந்துநின் னன்பர்தம் பணியாடமறமது கிடைக்கின்" என்றும், "அன்பர் பணிசெய்யவெனை யாளாக்கிவிட்டுவிட்டா லின்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" என்றும் தாயுமான சுவாமிகள் கூறியதன் கருத்துச் சிந்திக்கத்தக்கது.

புல்லறிவகற்றி நல்லறிவுகொளீஇ
எம்மனோரையு மிடித்துரைநிறுத்திச்
செம்மைசெய்தருளத் திருவுருக்கொண்ட
நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க்குண்டோ பெறத்தகாதனவே

(சிதம்பரமும்மணிக்கோவை)

என்னுங் குமரகுருபரசுவாமிகள் திருவாக்குத் தொண்டர் கூட்டத்தா லெய்தும்பயனை நமக்குநன் கறிவுறுக்கும். எங்குஞ் சிவமேகண்டு வாழுமிப் பெரியார் தம்மோடிணங்கி வாழ்வாரையும் சிவமெனக்கருதும் பாவனையாற் சிவமாக்கிவிடுவர். அறிவொழுக்கங்களிற் சிறியோரும் அடியாருறவின் பயனாகத் தம்பாட்டுள்ள அறியாமையுள்ளிட்ட தீச்சார்புகள் நீங்கப்பெற்றுச் சிவபோகப் பெருவாழ்வைத்தரும் முத்திநிலையை யடைவது திண்ணம் என்பதை,

செய்தவவேட மெய்யிற்றுங்கிக்—
கைதவ வொழுக்கமுள் வைத்துப் பொதிந்தும்—
வடதிசைக்குன்றம் வாய்பிளந்தன்ன—
கடவுண்மன்றிற் றிருநடங்கும்பிட்—
டுய்வது கிடைத்தனன் யானேயுய்தற்—
கொரு பெருந்தவமு முனுற்றிலனுனுற்று—
தெளிதினிற் பெற்ற தென்னெனக்கிளப்பிற்—
கூடா வொழுக்கம் பூண்டும்வேடங்—
கொண்டதற் கேற்பதன் றெண்ட ரொடுபயிறலிற்
பூண்ட வவ்வேடங்காண்டொறுங் காண்டொறு
நின்னிலை யென்னிடத்துன்னியுன்னிப்
பன்னு ணேக்கின ராகலினன்னவர்
பாவனை முற்றியப் பாவகப் பயனின்யான்
மேவரப் பெற்றனன் போலுமாகலி—
னெவ்விடத்தவரூனை யெண்ணினர் நீயுமற்—
றவ்விடத் துளையெனற் கையம்வேறின்றே.

என்னும் செய்யுட் பகுதியால் தமிழ்ப்புலவர் ஆய்ந் தாய்ந்தின்புறவும், சைவநல்லார் படித்துப் படித்தானந்த பரவச மாகவும், குமரகுருபரசுவாமிகள் விளக்கிப் போந்தமை காண்க.

சிவனடியார் இப்பாவனை முறையாற் செயற்கருஞ் செயல்களைச் செய்துமுடிக்கும் தெய்வ ஆற்றல் நிரம்பப் பெற்றவரென்பதை,

அன்னவ ளூமையு மீசனுமென்ன
வருச்சனைபுரிந்த பாவனையாற்
தன்னிகரிலாத சாமவானெடுத்த
கோலம்போற்ற ளிரியருளுய்
முன்னைநாண் மைந்த, னென்பது மறந்து
மொய்கு ழலாமென முயங்கத்
தன் னெடுநெறியிற் போதருஞ்சு மேதாத்
தனைமுக நோக்கி நின்றுரைக்கும்

பருவத்தொரு கோடி தவத்துளம் பற்றினுலும்
நிருபற்கிறை கேளெனதன்பர் நினைந்த பான்மை
யொருவர்க்கு மெம்மீசர் தமக்கு மொழிக்கலாமோ
தருகுற்றனம் வேறுள கேளெனத் தையல்
சொன்னுள்.

(பிரமோத்தர காண்டம், சீமந்தனிபாவனை)

எனவரும் பிரமோத்தர காண்டச் செய்யுட்களாலுமறிக. வைதர்ப்ப நாட்டரசன் சொற்கேட்டுப் பெண் வேடம் தரித்து முன்சென்ற பிராமண வாலிபனைப் பெண்ணாகவே பாவித்துத் தானங்கொடுத்தாள் சைவத்திருவுடைச் சீமந்தனி யென்னுஞ் சீமாட்டி. இவள் பாவனையாலாணுருவிழந்து பெண்ணுருப் பெற்றான் வாலிபன். அடியார் தம் பாவனையாற் சாதித்ததை மாற்றவும் அழிக்கவும் இறைவனாலும் முடியாதென்றுமையம்மையே பிரசன்னமாகித் தம்பாற் குறையிரந்து நின்ற வைதர்ப்ப நாட்டரசனுக்குக் கூறியருளினாராகில்,

தம்மை வழிபட்டு நிற்போர்க்குச் சிவனடியார் செயவல்ல உபகார மித்துணைத் தென்று யார் தான் கூறமுடியும்.

சிவபக்தியுள்ளார் சிந்தை சொற்செயலெல்லாம் சிவன்பாலன்றிப் பிறபொருண்மேற் செல்லாவாத லின் இவர் தம் கரணமெல்லாம் தெளிந்து புனித மடையப் பெற்று, எளிதில் அத்துவித முத்தி நிலைக் குரிய ஞானிகளாய்த் திகழ்வர். எங்கும் எக் காலமும் சிவத்தைக் கண்டு சிவோகம் பாவனை பண்ணிச் சிவபோக நிஷ்டாபரராய் வாழுமிவர்பாற் சிவஞ் சாந்நித்தியமா யிருத்தலின், இவர் சிவபரம் பொருளினருட் டொழில்களுக்கெல்லாம் உரியராய்த் தம்மையடைந்த மக்கட்கு இகபரசுகமெல்லாம் உத வுதல் இயல்பே. இவர் தந்திரு நோக்குப் பரிசங் களால் இவரை யடைந்தோர் புனிதராய் நற்கதி யடைவதும் இவர் சேர்க்கையால் மூர்த்தி தலம் தீர்த்தங்கள் விசேடம் பெற்று விளங்குதலும் இவர் தெய்வத்திருவருணிலைக்கேற்ற நிகழ்ச்சிகளேயாகும்.

நிருவிகற் பத்தாற் சீவன்முத்த
  னுயிருப்பானின் மலபாவனையு
  டையனுதலினுலவன்ருன்
திரிதரு காலத்திலே தன்னையடைந்
  தோரைத் திருநோக்கான்
  மனவாக்காற் காசரணுதிகளால்
அருளின்மல விருணிக்கி முத்தராக்
  குவன்வேறவனை யிகழ்ந்தோ
  ரதோகதியடைவரவன்செல்
தரணிதல விசேட மாலயமூர்த்தி
  விசேடஞ் சலந்தீர்த்தவிசே
  டமாந்தானவனுமவனே

(சருவஞானோத்தரம்)

பிறவிப் பெருங்கடலில் ஆசையென்னும் மீனும் அதன்வழித் தோன்றிய கோபம் அச்சம் கவலை யாதிய ஏனைய மச்சங்களு மடர்க்க நெஞ்சழிந்து அறிவு கலங்கி யவலப்படுங்காலை, நமக்கு விவேக வாளும் வைராக்கிய கவசமும் உதவி மெய்ஞ்ஞா னோபதேச மென்னும் சஞ்சீவி மருந்தினுற் சோக நீக்கிப் புத்துயிரளித்து, வெற்றிபெற்று வீறுடன் வாழத் தெய்வத்துணை புரியும் பேரருளாளர் இச் சைவ நல்லாரேயாவர். அகங்காரம் மமகாரமென் னும் பெரும் பாம்புகளின் விடத்தைத் தம் மருட் பார்வையோடு கூடிய பாவனையாற்றீர்த் தொழிக்கு மாந்திரீகருமாவர் இவர். சம்சார மென்னுங் கடலைக் கடந்து முத்திக்கரை சேர்தற்குத் தெப்ப மாயுதவுவதிவர் நல்லுபதேசம். இவர் பிறவிப் பிணிக்குநீக்கும் மருத்துவரா யெங்குந் திகழ்வது வைத்திய நாதப் பெருமான் தொண்டரானமை பற்றி யென்க. காமக்குரோதாதி பகையால் மெலி ந்து வருந்தும் நம்மனோர்க்குச் சூழ்ச்சித்துணைவ ராயும் உற்றுழியுதவுமுயிர்த் தோழராயும் நின்று, மனச்சாந்தி யென்னும் அரசுரிமையை யுதவும் உத் தமர் இவரே. பிரபஞ்சச் சார்பின் பெருவெப்பத் தினுல் மெலியும் மக்கட்குக் குளிர்நிழல் தந்து இளைப்புத் தீர்ப்பது இவர் சகவாசம்.

இறைவன் அடியார்க் கெளியன், பக்தபராதீனன்; புல்லிய வாணனுக்காய்ப் புறங்கடை காத்தவன்; "அரவகலன்குலார்பாலாசை நீத்துவர்க்கே வீடு தரு வமென்றளவில் வேதஞ் சாற்றிய" பின்னு மடி யாற்காகப் "பரவைதன் புலவி தீர்ப்பான் கழுது கண்படுக்கும் பானுளிரவினிற் றூது" சென்றவன்; அவனைச் சிந்தித்து வாழ்த்தி வழிபட்டுத் தம்மை அவனுகப் பாவிக்கும் அவனடியாரும் அத்தன்மை யினரேயாவர். அன்பர்க் கெளிவந்த விவர்தம் மைச் சரணடைந்தாரைத் தவிக்கவிடார். ஆதலின், சிவமூர்த்தமாய் விளங்குமிவரை மனமொழிமெய் களாற் சேவித்து உய்தி பெறுதலே மக்களாய்ப் பிறந்ததன் பயனென வறிந்து கடைப்பிடிக்க அடி யார் சேவையாலடையும் பயனை,

கருமுகி னிகரனகுழன்மட வரலியர்
  களபமென் னகிலினை கலவாரே
மருமல ரயனுடனரிமக பதிமிக மகிழ்பத
  மனமுற மதியாரே
ஒருவுத லிருவினை விதிமதி விபரித முறுபிற
  வியினெறி யுழலாரே
அருமறை முடிவினி னடமுடை
  யவனடி யிணை தொழுமடியவரடியாரே

(சிவஞானதீபம்)

என்னும் செய்யுளானுமறிக.

அரனடியார் திருவடி வாழ்க.

---

## சுதந்திரதின விழா

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

வதும், தேசீய ஐக்கியத்தை உருவாக்குவதும், இன மத சௌஜன்யத்தை ஏற்படுத்துவதுமே எமது முக்கிய வேலையாகும்.

சுதந்திர தினமாகிய இன்று, நாம் விடுதலை யடைந்தபொழுது எம்மீது சுமத்தப்பட்ட பொறுப்பு களுக்கு எம்மை அர்ப்பணிக்கச் சங்கற்பம் செய்து கொள்ளுவோமாக. நியாயம் வழங்கும், சட்டத்தை யும் ஒழுங்கையும் நிலை நாட்டும், ஒரு ஐக்கிய சமு

(28 ம் பக்கம் பார்க்க)

# எங்கள் கடமை

டாக்டர் ஆனந்த குமாரசுவாமி

**தமிழாக்கம் : திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை** (யாழ்ப்பாணத்திலே 1906 ம் ஆண்டு ஜூன் மாதம் 14 ந் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் வாசித்த உபசாரப்பத்திரத்திற்கு டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் செய்த உத்தரரூபப் பிரசங்கம்).

பிரபுக்களே !

நான் ஏதுஞ் சொல்லுமுன்னே உங்கள்பாலொன்று வேண்டுவன். எங்கள் தாய் மொழியாகிய தமிழிலே உங்களோடு சம்பாஷித்தற்கு இயலாதவனாயிருத்தலைப் பொறுத்தருள்வீர்கள். என்னுடைய ஸ்திதியானது என்சீவிய காலத்திற் பெரும் பாகத்தை இங்கிலாந்திற் கழிக்குமாறு வைத்துவிட்டது. எதிர் காலத்தை நோக்குமிடத்தும் அவ்வாறே முடியுமென நம்புகிறேன். இதனால் எனக்கு எங்கள் தாய் மொழியாகிய தமிழை வழங்குதல் அசாத்தியமாய்விட்டது. ஆயினும் அம்மொழியின் மகத்துவமும், தமிழ் மக்கள் யாவர்க்கும் அதன் இன்றியமையாப் பெருஞ் சிறப்பும், என்மனத்திடையே பெரிதுமழுந்திக் கிடக்கின்றமையால், தமிழ் நூல்களை மொழிபெயர்ப்பு மூலமாகவும், ஒரு சிறிது மூலநூன் மூலமாகவும் அபிமானித்து ஆராய்ந்து வருகின்றேன். நானும் உங்களிலொருவனாவதற்குப் பெரிதும் ஆசையுடையேன் என்பதை நம்புவீர்களாக. ஆகையால் என்னை உங்கள் நண்பனாகவும் ஒரு தமிழனாகவும் கைக்கொள்ள விருப்புடையராயிருத்தற்காக உமக்கு நன்றி பாராட்டுகின்றேன். மூன்றாமுறையாக நான்கு வருஷங்களுக்கு முன்னே நான் இலங்கைக்கு வந்தபோது எல்லா வகையாலும் ஆங்கிலேயனாகவே விளங்கினேனாயினும், ஆங்கில நூல்களினும் கலைகளினும் உண்மையளவில் விரும்பத்தக்கதன்மேல் வைத்த விருப்பத்துக்குச் சிறிதும் பங்கமின்றி இந்திய சிசுவாகப் புனர்ச்சனனமெடுத்து ஒரு பிள்ளை தன் பெற்றாரை மீண்டடைந்தாற் போல ஒருவாற்றால் என்முன்னோர் ஜன்மகிருகத்துக்கு மீண்டிருக்கின்றேன்.

எனதறிவினும் மிகக் கதித்த பேரறிவாளராகிய முதியோர் என்னைச் சூழ்ந்திருக்கக் காண்கின்றேன். எனக்கு மரியாதை செய்வதினும் அவர்க்குச் செய்வதே தகுதியுடையதாம். இன்னுஞ் சொல்லப்புகின், தமிழருள்ளே ஒரு சிலரொழிய மற்றெவரினும் நானே மேலைத்தேசத்திற் பூரணமான பயிற்சியுடையனானதும், முழுதும் ஆங்கிலேயனாகவே வளர்த்தெடுக்கப்பட்டதும், பின்னர்க் கீழைத்தேசம் வந்ததும், சுதேசாபிமானம் சாதியபிமானங்களாற் பிணிப்புண்டதும், ஆங்கிலேயருட் செய்வார் அரியரென்னும்படி கீழைத்தேசத்துப் பரமார்த்தங்களை நமக்குரியனவெனக் கொண்டு அவற்றின் வசமானதும் உண்மையேயாம்.

இவ்வகை அபேக்ஷைகளால் உந்தப்பட்டவனாய், இவ்வகை அகத்து நோக்கம் புறத்து நோக்கமென்னும் இருபக்ஷ நோக்கத்தினாலுங் கிரகித்த அபிப்பிராயங்களை வாய்த்த அமயங்களிலே வெளிப்படுத்த முற்பட்டேன். தேசாசார பங்கத்தாலும் மேலைத்தேசாசாரங்களைச் சிறிதுஞ் சிந்தனையின்றிப் பின்பற்றப் புகுவதனாலும் விளையுங் கேடுகளையும் மாற்றமொன்றையே கருதி மாறும் மௌட்டிகத்தையும் எடுத்துங்களுக்குப் பிரசங்கஞ் செய்யுமுங்களுள்ளே பெரும் பாலார்க்கு, நான் மேலைத்தேசாசாரத்தை முற்றக் கைக்கொண்டவனாகவும் அந்நியனாகவும், காணப்படுவேனென்னு மாசங்கையுடையேன். அவ்வெண்ண முங்கள் உள்ளத்தினுளதாயின் அது காலவடைவில் நீங்கிவிடுமென்பது எனது நம்பிக்கை.

உள்ளபடி இங்கிலாந்தில் வளர்த்தெடுக்கப்படாத நம்மவர்களுள் எவர்க்கும் பாவனை விஷயத்திலே தலையிடுதல் முற்றும் ஏற்புடையதன்றெனப் புலப்படுவது அசாத்தியமென்று நினைக்கின்றேன். அவ்விஷயம் ஆங்கிலேயர்க்கு வெளிப்படை. நமக்கோ அது மறை பொருள். கீழைத்தேசத்தில் வந்தவுடனே சாதாரண ஆங்கில நோக்கத்தை விடுத்து நோக்கியபோது அவசியமெனப் புலப்பட்டன, மேலைத் தேசாசாரங்களை விரைந்து கிரகித்துக் கொள்வதன்று, மூவாயிர வருஷமாக நமக்குப் பெரிதும் அநுகூலமாயிருந்த ஆசாரங்களையெல்லாம் விவேகமின்றி விரைந்து புறத்தே தள்ளும் விஷயத்தைச் சிந்தித்தலும், எங்கள் சீவிய முறையை அடியோடு மாற்றப் புகுமுன்னே நன்றாக வெண்ணித் துணிதற்குப் போதியகாலத்தை வகித்துக் கொள்ளுதலுமேயாம்.

முப்பது வருஷத்துக்கு முன்னே எனது தந்தையாரே இலங்கையில் தமிழருள்ளே தலைமை பெற்று விளங்கினர். அவர் மேலைத் தேசாசாரத்தை எல்லை கடந் தனுசரித்தவரென்பது உங்களுள் அநேகருக்கு ஞாபகத்தில் வருவதாகும். அக்காலத்தில் பேதித் திருந்த கருமச்சார்புக்கேற்ப் ஒருவாறு அதனைச் சார்ந்தொழுகுவதும் மேலைத்தேசத்தாருடைய நாகரிக வியல்புக்கு நாமும் சமமாக நிற்குமாற்றலுடையே மென்பதை அவர்க்குக் காட்டுவதும் அவசியகமாயின. அவர் சீவந்தராயிருப்பரேல், (அவர் சென்ற அடிச்சுவட்டின்மேல் ஒருகாலத்து நடந்தவர்களாகிய என் மைத்துனர்கள் ஸ்ரீ அருணசலமும் இராமநாதனும் போல) நாம் எல்லைகடந்து சென்றமை அவசியமென்பதை அவர் காண்பதோடு எங்களுக்கும் எங்கள் முன்னோர்க்கும் வாழ்வுக்கின்றியமையாத பிரதிபந்தங்களாகிய சுதேசாசாரங்களையும் பாரம்பரியக் கொள்கைகளையும் அவரே முந்திப் பாதுகாத்திரக்ஷிப்பவராவர். ஆதலால் அத்தொழிலை அவர் புத்திரனர் செய்தொழுகல் தக்கதாம். இனி எனது தாயாரோ வெனில், அவர் எனது தந்தையாரை விவாகஞ் செய்தது தமிழரும் ஆங்கிலேயரும் தம்முள்ளே ஒருவரை யொருவர் நன்குணர்ந்து ஒருவர் மீதொருவர் அன்புதூண்டி யொழுதற்கேதுவாகுமென்னும் நம்பிக்கை கொண்டேயாம். எனது தாயார் தமிழரிடத்திலே மிக்க மதிப்பும் அபிமானமுமுடையவர். என் தாயாருக்கு உவப்பாகிய ஒரு கருமத்தையே இப்போது யான் கையிட்டு முயன்று வருகின்றேன் என்னலாம்.

தற்கால வியல்பை நோக்குமிடத்து, அஃது உலகமெங்கும் விரைந்த மாறுதலும் மிக்க கவுரவமுமுடைய வொருகாலமாயிருக்கின்றது. உலகம் எத்துறையிலும் மெஞ்ஞான வொளியையே விரைந்து நாடுகின்றது. எங்களுக்கு அதிக வொளிவேண்டிய துண்மையே ; ஆயினும் புதியவொளி அத்துணையாகவேண்டியதில்லை ; பழைய வொளியைப் புதிய ரூபத்தோடாயினுமாகுக பழைய வடிவத்தோடாயினுமாகுக தூண்டிவிடுதல் வேண்டுமென நினைக்கின்றேன். எங்கள் பூர்வபிதாக்களோ பெரும்பாகம் மோசம் போயினரல்லர் என்னலாம். இந்தியாவினது சென்ற மூவாயிர வருஷத்துச் சீவியத்தைத் துருவியாராய்ந்து (இந்திய) ஆரிய சாஸ்திர சமூகத்தையும் பாரம்பரியங்களையும் பரமார்த்தங்களையும், தத்துவஞானிகள் செய்த நிரூபணங்களையும், சிற்பர்கள் கைவன்மையையும், ஆரிய மக்கள் சங்கீதவித்தையையும், அங்கே பரிணமித்த சமயங்களின் மகத்துவங்களையும் நோக்குமிடத்தும், இவைகளை ஆதாரமாகக் கொண்டு ஆரிய தேசத்தின் பரமோத்தம நிலையையும் பரமோத்தம உலக வாழ்வையும் மனத்திடைக் கொண்டு சிந்திக்குமிடத்தும், அவற்றினுஞ் சிறந்த திவ்வியஞான மூலத்தையும் அடைதற்கோர் ஆழ்ந்த சத்திய நன்னீர்க் கேணியையு மனத்திடைக் கற்பிதஞ் செய்தல் எனக்கரிதென்பதை அங்கீகரிக்கின்றேன். ஆயினும் இந்தியாவையும் இந்தியாவின் பூர்வநிலையையு மெண்ணுமிடத்து எங்கள் அந்தக் கரணமும் மனமும் வருந்துகின்றில.

இந்தியாவினது வருங்கால கதியைக் குறித்து நினைப்பு வருமிடத்து நினைக்கும் பொழுது எங்கள் எண்ணமெல்லாம், சென்று போனதன்மீது தகாத அருவருப்பும், எம்மை இந்நிலைக்குக் கொணர்ந்தவற்றை யெல்லாமொழித்து விடுதற்கு எல்லையில்லாத பேரவாவும், மாற்றமொன்றையே விரும்பிச் சிறிதும் யோசியாது மாறுதற்குப் பேரவாவுமாகிய இவற்றாலூனமுற்ற கலப்பெண்ணங்களேயாகும்.

மேற்றிசையிலே நம்மைப்போல யுத்தப்பெருமையையாவது பரந்த ராச்சியாதிகாரத்தையாவது அவாவத்தகாத சிறிய தேசவாதிகள் அநேகர் இருக்கின்றார்கள். அவர்களையே நமக்கு வழிகாட்டிகளாக இப்பொழுது நோக்குவேம் ; அடையவேண்டிய உன்னத பதவியை யடைந்து திருஷ்டாந்த ரூபமாக நெடுங்கால மிருக்கக்கூடியவர்கள் உருவத்தாற் பெரிய தேசவாசிகளல்லர். கிரேக்கர் ஒருள் ஙங்கையளவு தேசவாசிகளன்றோ. அவர்கள் தம்மினும் பன்மடங்கு பெரியராயினும் அறிவிலே சூனியராகிய ரோமதேசவாசிகளைப் பார்க்கினுஞ் சிறந்து உலகத்தை அதிகரித்து விளங்கினரன்றோ. இன்னும் வருங்காலத்திலும் விளங்குவார்கள். ஆறுவது முதல் ஒன்பதாவது நூற்றாண்டு வரையும் சாஸ்திர சமூகமும் கலாசமூகமும் அபிவிருத்தியுற்றோங்கி விளங்கியது அயர்லாந்திலன்றோ. ஐரிஷ் சாஸ்திரங்களையும் ஐரிஷ் பாஷையையும் சமயப்பிரேரிதர்கள் (மிஷனரிமார்) ஐரோப்பிய தேசமெங்கும் பரவச் செய்தது அயர்லாந்திலிருந்தன்றோ. பத்து முதற் பதின்மூன்றுவது நூற்றாண்டுகளுக் கிடையிலே செம்பாகத்திலும் மகாகாவியநடையிலும் உள்ளவாறு "ஹோமர்" காவியத்தை யொத்த ஒருத்தமோத்தம காவியத்திற்கு உற்பத்திஸ்தானம் அயிஸ்லாந்து தேசமன்றோ. வித்தியா விஷயம் பெரிதாக மதிக்கப்படுவது இந்நாள் சுவிற்சர்லாந்து, தென்மார்க்கு தேசங்களிலும் ஸ்கத்லாந்து வெல்ஸ் தேசங்களிலுமன்றோ. அயர்லாந்து பிரிட்டானி புறொவென்ஸ் நாடுகளிலேயே வித்தியா விஷய ஆரவாரம் நடைபெறுவது. ஏழைகளாயுள்ளவர்

களே முன்னுளில் அநேக கருமங்களைச் செய்து வைத்தவர்கள். என்றும் அப்படியே நடப்ப தாகும். "கடவுளைத் தரிசிப்பவர்கள் ஏழைகளாத லின் அவர்களே அருட்செல்வர்கள்" என்ருர் யூத குருவும். அவ்வாறே கடவுளைத் தரிசித்த ஜனங்கள் உளரெனின் அவர்கள் இந்திய தேசவாசிகளே யாவர்..

இந்நாளிலே அமெரிக்காவிலேயுள்ள ஐக்கிய நாடு களே மிக்க செல்வத்தாலும் மிக்க வாணிகப் பலிப் பாலும் சிறந்து விளங்குவனவாகும். ஆயினும், நிலைத்த புகழ்படைத்தவொரு நூலாசிரியனை, ஒரு நுண்வினைச் சித்திரகாரனை, ஒரு சங்கீதகாரனை அந் நாடுகள் தந்தனவெனப்போகா. பராமுகராயுள்ள ரஷ்யரையும் பாதிவரை அழித்தொழிக்கப்பட்ட போலந்து தேசவாசிகளையும் அச்செயலுக்கு நோக்கு தல் வேண்டும்.

இந்நாளைக்கு வேண்டும் பெரும்பேறு ராச்சி யாதிகாரமன்று. சுதேசாபிவிருத்தியும் தேசங்களின் பரஸ்பர வியவகார சம்பந்தங்களுமேயாம். சிறிய தேசத்தினர்க்கு விளங்குநாள் வந்துவிட்டது. ஒவ் வொரு தேசத்தாரும் ஒவ்வொன்றிலே சிறந்தவர் கள். அவ்வத்தேசத்தாருந் தத்தமக்குரிய சிறப்புப் பங்குகளை வழங்குமிடத்தன்றி உலகம் பூரண பெரு மையுடையதாகாதன்றே. நாமோ நம்மை இந்நிலே யில் வைத்த சிறந்த புத்தி விசேஷங்களையெல்லாம் விடுத்துப் பரதேசத்தார் செயலைப் பின்பற்றி அவ ரைப் போலாவதற்கு முயலுகின்றேம். அது விவேக மும் பெருமையுமாகுமா ? உலகத்தொரு திசை யிலே பரிணமித்த ஒரியல்பு மற்றத் திசைகளிலே யுண்டாய வியல்புகளுக் கீடு செய்து நிற்றற்கும் பொருந்துவதாகுமா ? இதனுல் மேலைத் தேசத்தா ரிடத்து நாம் கற்கக் கிடப்பது யாதுமில்லையென்பது எனது கருத்தாகக் கொள்ளவேண்டாம். ஆயினும் நாங்கள் நமக்குரிய வித்தியாபிவிருத்தியில்லாது மிலேச்சராயிருக்கவில்லை. எங்களுக்குரிய பொருளை யிழந்து புதிதாக வொன்றைச் சம்பாதிக்குமிடத்து நமக்குக் கிடைக்கும் ஆதாயம் யாதாகுமோ ? தன் உயிரைக்கொடுத்து உலகமுழுவதையும் பெறுதலால் ஒருவன் அடையும் பயன்ருன் யாதாகும் ? எங்கள் சம்பிரதாயங்களில் எங்களுக்குரிய ஒழுக்கங்களில் சிறந்தவைகளை யெல்லாம் வகித்துக்கொண்டு அந் நியர் பால் கற்கக் கிடப்பதை விருப்போடு கற்பதற்கு முயல்வோமாக. எங்கள் சம்பிரதாய மென்றதற்குச் சாமானிய திருஷ்டாந்தமிரண்டு கூறுவேன்.

முதலாவது ஒரு சாமான்ய திருஷ்டாந்தம். நான் இப்போது தங்கியிருப்பது பெரியதெருவிலே மங்க ளூர் ஓட்டினுல் வேய்ந்த ஒரு புதிய வீடு. பிரபுக் களே கேளுங்கள் ; அவ்வீட்டுக் கூரை மேல் வீழ்ந் துருவிவரும் சூரியோஷ்ணமானது மிகக்கொடியது. அதனுல் நான் பன்முறைகளிற் குடைபிடித்துக் கொண்டுமுள்ளே யிருக்க வேண்டியவனுயினேன். நூறு வருஷத்துக்கு முன்னே கட்டப்பட்ட பழைய தமிழ் வீடுகளுக்குள்ளுஞ் சென்று பார்த்திருக்கின் றேன். பெரிய மார்க்கத்தை (ருேட்டை) விட்டிறங்கிக் கதவையடுத்தவுடனே குளிர்ச்சிதோன்றும். அதுவு மன்றி அவ்வீடுகள் செம்மையும் அழகும் பொருந் தக் கட்டிச் சாதாரண சித்திரவேலை செய்த வைர மரங்களிட்டு முடிக்கப்பட்டவைகள். அவ்வீடுகள் நூறு வயசு சென்றனவாயினும் மேலும் நூறு வருஷத்திற்கு நிலைபெறத் தக்கவை. நான் கூறிய வீடோ தேய்வுமாய்வுங் காணத்தொடங்கி விட்டது. குளிர்ச்சி பேதத்திற்குக் காரணம் வெளிப்படை. புது வீட்டின் மேலுள்ள ஓடு ஒரடுக்கு. அதன் மீது விழும் உஷ்ணம் கீழே அறையிலுள்ள வாயுவினுல் வகிக்கப்படுகின்றது. பழைய வீட்டின் கூரை பீலி யோடு நான்கு ஐந்தாயினும் ஓலையாயினும் அடுக்கி வேயப்படுவதாதலின் அவற்றினிடையேயுள்ள பல வடுக்கு வெளியானது அவாககமாதலின் உஷ்ணத் தைக் கீழே அறைக்குள்ளே செல்லவிடாமற்றடுக்கும். பிரபுக்களே வெறும் நாகரிக கிரமத்தை அநுசரித்த லாலும் பழையதைக் கொடுத்துப் புதியதை வாங்குவதாலுஞ் செய்த பிழைக்கு இது திருஷ் டாந்தமன்றே. எங்கள் சம்பிரதாய சம்பந்தமா( நான் எடுத்துக் காட்டும் மற்றெரு திருஷ்டாந்தம் எங்கள் பெண்களைப் பற்றியதேயாம்.

எங்கள் பெண்களை ஒதுக்கிக் கூட்டிலடைத்துவைக் கும் வழக்கம் எங்கள் சாதியாரை அடிச்சுவடுபற்றித் தொடர்ந்த கண்டபாவனையாகிய கெட்டவொழுக்கத் திற்குத் திருஷ்டாந்தமன்றே. 1800 வருஷங்களுக்கு முன்னேயிருந்த வழக்கம் வேறு. முக்காட்டு வழக்க மானது துருக்கவரசர் காலத்தில் வந்தது. பெண் கல்வி சுவாதீனங்களைக் குறித்து அவதானிப்போ மாயின், அஃதெங்கள் பரம்பரை ஆசாரங்களைப் பங்கஞ் செய்வதாகாது, பூர்வ சிறந்த வழக்கத்தை அநுசரிக்கப் புகுவதாகுமெனக் கொள்ளலாம். இதைக் குறித்துப் பின்னர்ப் பேசுவேன்.

இப்போது வித்தியா விஷயமாகச் சிறிது கூறுவேன். முதலிலே நான் உங்கள் மனத்தி லிருத்த விரும்புவது எங்கள் கருமத்தை நாங்கள் செய்வதேயன்றிப் பிறரை நம்பியிருத்தலாகாதென் பது. நம்மைப் பிதாவைப் போலப் பெரிதும் பரி பாலிக்கும் ராஜாங்கமிருக்கினும் உண்மையை நோக்குமிடத்து எந்த அந்நிய ராஜாங்கமும்

நல்லபிப்பிராயத்தோடு எங்கள் ஜாதி வாழ்க்கைக்கு மூலாதாரமாயுள்ள வொழுக்கங்களைப் பிரேரித்து நடாத்துவதாகாது. முற்காலத்திலே எங்கள் ராஜாக்களும் அதிபதிகளும் ஜனங்களுடைய வைதிக லௌகிக விருத்திகளிலே பெரிதும் கருத்துடைய ராயிருந்தார்கள். அவர்களுக் கிணையாக ஆங்கிலேய ருள்ளே விளங்கினேன், இங்கிலாந்திலே விளங்கிய ராசபுருஷருள்ளே உத்தமமெனக் கொண்டாடப்படு பவனாகிய "அல்பிரெட்" அரசனொருவனேயன்றி வேறில்லை. இனி எங்களை ஆள்பவர்களோ வேற்றுச் சாதியாளரும் வேற்றுச் சமயத்தவர்களுமாயுள்ள வர்கள். அவர்கள் எல்லோரும் தமது சமயம் சாதி களின் மேம்பாட்டைப் பெரிதுங் கொண்டாடுகின்ற வர்கள். அவர்கள் தம் மனப் பற்றெல்லாம் வாழ் விலும் சாவிலும் எம்பால் வைப்பதில்லை. "லாட் மின்டோ" வென்பவர் தம்முடையவுடல் இந்தியா வுக்குச் சென்றாலும் தமதுள்ளம் இங்கிலாந்தி லொரு சிறுகோணத்திற் கிடக்குமென்று கூறவில் லையா? எங்கள் கருத்து வழிகளும் எங்கள் வழக் கங்களும் எங்களை எவியாட்டுகின்றனவாகிய மற் றெவையும் நம்மை ஆள்பவர்களுக்குச் சம்பந்த மில்லாதனவாகவே யிருக்கும். அவற்றை அவர்கள் மனச்சான்றோடு பிரயாசப்பட்டு அறிந்துகொள்ளப் புகினும் புகுவர்; விடுகினும் விடுவர். எங்கள் அரசினர் பூரணமனசோடும் எங்களைத் தந்தை போலப் பாதுகாப்பராகார். எங்களுக்கு ஊர்காவல ராகவும் சட்டங்களை வகுப்பவர்களாகவும் கணக்கர் களாகவும் இருத்தலொன்றே அவர்க்கு இயலுவ தாகும்.

சமய விஷயத்திலும் கல்வி விஷயத்திலும் அவர் கள் எமக்குத் தலைவராதல் கூடாது. ஒரு சிலர் மாத்திரம் நல்லபிப்பிராயமுடைய அநுகூலிகளா யிருத்தல் கூடும். இருந்துமென்ன? ஒரு வருஷ மிருப்பர். அப்பால் நமது நாட்டை விட்டகல்வர். எமது பூர்வ ராஜமாலிகிதராகிய "சேர் இம்தேண்" என்பவர் கல்வியறிவும் இனயந்தமட்டும் நமக்கு அநுகூலமுமுடையராயிருந்தனர். ஆயினும் அவர் இலங்கையிலே தமது உத்தியோககால முடிவிலே ஜாதகமென்பது யாதென என்னை வினவினர். சிங்கள அரசர் புத்தசமயத்தையும் கீழ்த்திசைக் கல்வியையும் பரிபாலித்து வந்த வியல்பை நோக்கிப் பின்னர்ச் சாதகமாவது இன்னதென்பது தானு மறியாத உபேக்ஷயுள்ள ஒருவன் புத்த சமயிகளை ஆளுமியல்பையும் நோக்குங்கள். முன்னாளிலே நம் மவராகிய கொடுங்கோலரசரால் நாம் ஆளப்பட்ட துண்மையே. இப்போதோ அத்துணைக் கொடுங் கோன்மையில்லாத அதிகாரிகளால் ஆளப்படுவது முண்மையே. ஆயினும் எமது அகவாழ்வின்கண் அவர் அற்பசிந்தையே யுடையர். ஆதலால் நாமே நமது கருமத்தைப் பார்ப்பதன்றி நமக்கு உபாயம் வேறில்லையென்பது பிரத்தியக்ஷம். நமது கருமத் தைப் பார்ப்பதற்கு அதிலும் வித்தியா விஷயத் தைப் பார்ப்பதற்கு அநேக வழிகளுண்டு. ஒரு தேசத்தாரை, அவர்கள் விருப்பத்தைச் சிறிதாயினு மநுசரியாமல் ஆள்வது கூடாத கருமமாம். தமிழ ருஞ் சிங்களருமொருங்கொத்துத் தமது பொதுக் கருத்தை வெளியிடுவராயின் வித்தியாதிகாரிகள் தடுத்தாள்வது கூடாதன்றோ!

இலங்கையிலே வீடுகள்தோறும் ஆங்கில பாஷையே வழங்குநாளுமொன்று வருமென்னும் நம்பிக்கையுமுளதாகாதன்றோ. அங்ஙனமின்றி ஆங் கிலம் வீடுகள் தோறும் வழங்குநாளொன்று வரு மாயின் அந்நாளில், பிரபுக்களே, நமது தமிழ்ச் சாதி உளதாகாதொழிந்து விடுமன்றோ. ஒரு தேசத் தாரைத் தேசத்தாராக்குவது யாது? குலமொன்றே யன்று. சமயசம்பந்தமும், பாஷா சம்பந்தமும், சாஸ்திரம், சங்கீதம், தொழில் வித்தைகளுமன்றோ. எத்துணைக் காலநீடித்து நிற்பதாயினும் எவ்வகைப் பராக்கிரமும் எம்மை ஆங்கிலேயராக்க மாட்டாது. 40 கோடி இந்தியருள்ளே ஆங்கிலேயரைப் போல உள்ளவாறு ஆங்கிலேயராயுள்ள நூறு ஆங்கிலேயர் இல்லையன்றோ. "போவல்வ்" என்பவர் செய்த காவியமும் "தேர்தர்" சரித்திரமும், "கெல்திக்" சிற்பமும் மத்தியமகாலத்துச் சங்கீதமும், "காதிக்" நிர்மாண சிற்பமும் பெயரளவிலன்றி உள்ளவாறு அறிந்தார் இங்கெவராயினு முளரா? ஆங்கில பாஷை யிலே அழியாப் பிரபல சாஸ்திர மொன்றை இந்திய னொருவன் எழுதுதல் சாத்தியமாகுமா? சிந்தித்துப் பாருங்கள். அக்கருமம் மற்றை ஐரோப்பிய தேசத் தார்க்கும் அசாத்தியமேயாம். ஆங்கில வித்தியா சாஸ்திரங்கள் ஆங்கிலேயர்க்கேயன்றி நமக்கு உண் மைச் சுவைதருவனவாகா. அவற்றின் ஆழ்ந்த பொருட்டுறைகளிற் பரிசயந்தானுமுடையேமல்லேம். நாம் வாசிக்கும் "மில்டன்" "உவேட்ஸ்வோத்" காவியங்கள் தற்கால இங்கிலாந்து சம்பந்தமான வையல்ல. "உவேட்ஸ்வோத்" என்பவர் செய்த ஆங்கிலபுஷ்பவிவரண நூலால் நமக்குப் பயன் யாது? அப்புஷ்பங்கள் நாமறியாதனவன்றோ. "உவேட்ஸ் வோத்" என்பவர்க்குத் தாமரை தாமரையேயன்றி மற்றன்று. நமக்கோ அஃது ஆயிரம் உவமானங் களையுஞ் சம்பந்தங்களையும் அடக்குவனவாம். ஷேக்ஸ் பியர் நூல் உலகத்துக்கொரு சிரேஷ்டமான பழைய நூலென்று மதிக்குமாறு நாம் போதிக்கப் பட்டது தகுமென நம்புகின்றேன்.

ஆயினும், "லாங்லண்ட், சாசர், ஹெரிக், பிரவுனிங், மாரிஸ்" முதலியோரது நூல்களால் நமக்கென்ன பயனும். ஞான போதம் வேண்டுமானால் நமது பழைய ஆசாரங்களையும் பழைய சாஸ்திரங்களையுமே, நாம் ஆராய்தல் வேண்டும். இக்கருமத்தை நம் மக்கள் கல்வி விஷயத்திற் சிந்திக்கின்றோமா? எங்கள் பிள்ளைகள் தமது ஜன்ம தேசத்தை மறத்தற்கும் வெறுத்தற்கும் ஏதுவாக வருவனவற்றைத் திடங்கொண்டு நிராகரித்தற்கு முற்படுகின்றோமா? நம்மக்களுக்குப் பௌதிக சாஸ்திரங்களையும் கைத்தொழிற்றுறைகளையுங் கற்பித்தற்கு விரைகின்றோம். இவை அவசியமேயாம். ஆயினும் முதற்கண் அவசியமானது சிட்சையாலாகிய அறிவன்றோ. கைத்தொழிற் கல்வியிலே மிக்க அபிவிருத்தி பெற்று விளங்குந் தேசங்களுள்ளே தென்மார்க்கு தேசமுமொன்றேயாம். அங்குள்ளவர்கள் தமக்குரிய பயிர்த்தொழிலைக் கைவிடாமற் பரிபாலித்து அறிவுவிருத்திக்குரிய கலைகளையும் வளர்த்து வருமாற்றலுடையவராயிருக்கின்றார்கள். அவர்கள் தமது பாடசாலைகளில் மாத்திரமன்று. கைத்தொழிற் கல்லூரிகளிலும் சுதேசாசாரங்களும் சுதேசசரித்திரங்களும் இன்றியமையாப் பாடங்களாக அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் பாட விதானத்தில் முதன்மையானவை சுதேச சரித்திரமும் சுதேச பூர்வசாஸ்திரமுமேயாம். அவற்றின் பின்னரே பௌதிக சாஸ்திரம் ரசாயன சாஸ்திரம் பிரகிருதி சாஸ்திரம் முதலியனவாம். இலங்கையிலே எங்கள் பிள்ளைகள் போய்க் கற்கும் வித்தியாசாலைகள் பெரும்பாலானவற்றிலே சுதேச சரித்திரமும் சுதேச பூர்வசாஸ்திரங்களும் கற்பிக்க வல்ல ஆசிரியன் ஒருவனுயினுமில்லை. இதன் காரியமாகச் சனங்களுக்குரிய அறிவு தழையாமலும் அபிவிருத்தியடையாமலும் ஒரே நிலையில் நிற்பதாயிற்று. இலங்கை வாசிகள் பிராசீனகிரந்த பாண்டியத்தியத்தை விருத்தி செய்தற்கு யாது செய்திருக்கின்றார்கள்? யாதுமில்லையென்னலாம். ஜர்மானிய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள மகாவமிசமென்னு நூலை இப்போது ஓராங்கில மாது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருவதாகிய இவ்வொன்றுமே எடுத்துக்காட்டத்தக்க முயற்சியாம். இலங்கை வாசிகளில் பாதித் தொகையினர் தாமும் இப்போதுள்ள நூல்கள் இவையெனவறியார். வைதிக விருத்தியில் ஆசையில்லாவிடத்துச் சடவிருத்தியின் பொருட்டு நாம் எத்துணை ஆசைவைக்கினும் அது கைகூடாதன்றோ. வயிற்றுணவினால் மாத்திரம் உயிர் வாழ்தல் கூடாதென்பதை உங்களுக்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. எங்கள் வித்தியாசாலைகளிலேயே தேசாசாரம் வளர்க்கப்படுதல் வேண்டும். எங்கள் மாணுக்கருள்ளேயே இனி வருதற்குரிய பெருந்தகைகள் தோன்றுல் வேண்டும்.

இதுகாறும் ஆண்மக்களுக்குச் சுதேசாசாரக் கல்வி அவசியமென்பது எடுத்து வலியுறுத்திக் காட்டினேன்; இனிப் பெண் மக்களுக்கும் அவசியமென்பது வலுயுறுத்துவேன்.

போதிய அளவு மேலைத்தேச அநுபவமுடையேனுதலின் எங்கள் பெண்மணிகள் நிலையினும் ஐரோப்பிய பெண்மணிகள் நிலை சிறந்ததென நினைக்கின்றேன். அங்ஙனமாயினும் ஒருதலைமுறைக் காலத்திலே அவ்வித்தியாசத்தைக் கிடப்பதும் கிறிஸ்த ஆசாரத்தை மேற்கொண்டொழுகுபவர்களைப் போல நமது பெண்களும் சுயேச்சையாக வெளியே சஞ்சாரஞ் செய்வதும் எட்டாத கருமமாம். இவைகளை உடனே செய்யத்தக்கவர்கள் நம்மவர்களுள்ளே தலைமை பூண்டிருப்பர்களேயாவர். பெண்களை மறைத்து வைக்கும் இக்காலத்து வழக்கத்துக்கு எங்கள் பூர்வ நூல்களினும் ஆசாரங்களினும் ஆதாரப் பிரமாணம் யாதுமில்லை. சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் நூல்களை ஆராய்வீர்களாயின் 1800 வருஷத்துக்கு முன்னருள்ள வியல்பு முற்றும் வேறெனக் காண்பீர். உண்மையை ஆராயுமிடத்து நமக்கியல்பாகிய பாழான பாவனைப் பழக்கங் காரணமாகத் துருக்க அரசர் காலத்து ஒழுக்கத்தைப் பின்பற்றி நமது பெண்களை மறைத்து வைக்கப்புகுந்தோம். துருக்க அரசியலுக்குட்படாதவர்களாகிய சிங்களவர்கள், ஒருவன் தனது தந்தை தமக்கை முறையினுள்ளவர்களையும் காணலாகாதென்னும் அத்துணைக் கடினமான கட்டுப்பாட்டுக்குச் சென்றிலர். கொழும்பிலுள்ள எனது உறவினரைத் தவிர வேறு தமிழ்ப் பெருமாட்டிகள் முகத்தை நான் கண்டறியேன். சிங்களர்க்கோ முகம்மதியர் சார்பினால் உண்டாகிய ஒழுக்க விகாரம் சிறிதுமில்லை. கண்டியிலுள்ள பிரதானிகள் மாளிகைகளிலே தங்கியிருக்கின்றேன். அவர்கள் தங்கள் புத்திரிகளை எனக்குப் பரிசயம் பண்ணிவைத்தார்கள்; அதனுல் விளைந்த ஆபத்து யாதுமில்லை. பெண்களுக்குச் சுவாதந்திரியமும் கல்வியும் அவசியமென யான் விண்ணபபஞ் செய்வது யாதுக்கு? எங்கள் குமாரர்கள் உலக வியாபாரத்திலே புகுந்து போராடி அந்நியரோடு கலந்து நல்லவும் தீயவுமாகிய பல வழிகளை அறிவார்கள். எங்கள் பெண் மக்களைக் கல்வி பயிற்றி அவர்களிடத்து நம்பிக்கை வைப்போமானல் அவர்களே எங்கள் பழைய நூல்களையும் இனிய பாடல்களையும் எங்கள் சந்ததிக்கு வழிவழி புகட்டிப் பாதுகாப்பவர்களாவார்கள்.

இங்குள்ள நாங்களே இந்தியாவிலுள்ளாரினும் மிக்க நவீன நாகரீகத் துவேஷிகளாயிருக்கின்றோம். மைசூரிலே பிராமண ஸ்திரீகளுக்காகப் பெரிய கல்லூரியொன்றுளது. அக்கல்லூரியிலே சில பெண்கள் சென்னைச் சர்வகலாசாலைப் பரீட்சைகளுள்ளே தலைமைப் பரீக்ஷைகளிலும் சித்தி பெறுகின்றார்கள். அவர்கள் விவாகம் முடித்த பின்னர்த் தத்தம் வீட்டுக் கருமங்களையும் கைவிடாமற் செய்து கொண்டே அப்பரீக்ஷைகளில் சித்தியடைகின்றார்கள். நம்மக்களை நல்வழிப்படுத்தற்கு அநுபவமும் நாட்டமுமில்லாத அறிவில்லாப் பாவைகளினும் இவர்கள் வல்லவர்கள் அல்லரா? அவ்வகை ஆங்கிலக் கல்வி வெண்டுமென்று இங்கே நான் பிரதிபாதிக்கின்றிலேன். எங்கள் பெண்மக்கள் தமிழ்ப் பெண்மக்களாயிருத்தல் வேண்டும் என்பதே யான் வேண்டுவது. எங்கள் பழைய ஆசாரப்படி பெண் மக்களை வளர்த்து வருகின்றோமா? முன்னாளிலே இந்திய பெண்கள் பெரும்பாலும் விவேகமும் கல்வியறிவு முடையராய் விளங்கினார்கள். இலங்கையினும் சம்ஸ்கிருதத்திலும் ஆரிய சங்கீதத்திலும் வல்ல தமிழ்ப் பெண்கள் உளர். இந்நாளில் யாழ்ப்பாணத்திலே வீணையில் வல்லவர்கள் உளரோவென்பது எனக்குச் சந்தேகம். பியானோ பிட்டில் வாத்தியங்கள் வாசிக்கப் பயிலுதல் வீண்கருமமாமென நினைக்கின்றேன். அவை வாசிக்கப் பயிலுவோர் நூற்றுக்கு ஒருவர்தாமும் இங்கிலாந்துப் பாடசாலைகளிற் கற்கும் சாதாரண சிறுமியர் அடையும் தேர்ச்சி பெறார். ஆண் பெண் இருபாற்குமுரிய கல்வியில் சங்கீதமும் ஒரு பாடமாதல் வேண்டுமென்பதை உங்கள் மனத்திடையிருத்துவது என் விருப்பம். இங்கிலாந்திலே ஆண் மக்கள் கற்கும் வித்தியாசாலைகளிலும் சங்கீதம் விஸ்தாரமாகக் கற்பிக்கப்படுகின்றது. பெண்மக்கள் கற்கும் வித்தியாசாலைகளினும் சங்கீதம் விஸ்தாரமாகக் கற்பிக்கப்படுகின்றது. பெண்மக்கள் வித்தியாசாலைகளிலே அதினும் அதிகமாம். தமிழ்ச் சங்கீதம் மிகச் சிறந்ததெனக் கொள்ளலாகாது. தற்கால ஐரோப்பிய சங்கீதத்திற்கும் அதற்கும் வேற்றுமையுண்டு. ஆயினும் பூர்வகால சங்கீதத்திற்கு அது வேறன்று; ஐரோப்பாவில் மத்திய காலத்தில் வழங்கிய சிறந்த சங்கீதத்திற்குச் சமானமானது. இன்னுமதற் கிணை கூறின் பூர்வ கிரேக்க சங்கீதத்திற்குப் பெரிதுமொப்புமையுடையதென்னலாம். உண்மையை நோக்குமிடத்து இந்தியாவே சங்கீதத்திற்கு ஆதி ஜன்மகிருகமாம். தற்கால ஐரோப்பிய நரப்புக்கருவிகளுள்ளே இந்தியாவிலுற்பத்தி பெறுதன மிகச் சிலவேயாம். இந்திய சங்கீதமும் வேறு. ஐரோப்பிய சங்கீதமும் வேறு; ஒன்றிலே சுர ஐக்கியம் காணப்படுகின்றது. மற்றதிலே ராக நிறைவு காணப்படுகின்றது. ஆதலால் எது சிறந்தது என்று சொல்லப் போகும்? ஐரோப்பிய சங்கீதத்தை அங்கீகரித்துக்கொண்டு இந்திய சங்கீதத்தைக் கைவிடுவோமாயின் இந்தியா மாத்திரமன்று உலக முழுதுமே நஷ்டமடைவதாகும். இந்தக் கல்லூரியிலே தானும் சங்கீதவினோதம் வைக்குங் காலங்களிலே பாதிக்கு மேல் ஐரோப்பிய சங்கீதங் கலக்கக் காண்பது என்மனத்திலே துயருக்கேதுவாகின்றது. இந்திய சங்கீதக் கருவிகள் யாதேனும் வழங்குவதுண்டோ என்பதும் எனக்குச் சந்தேகம். லிலிபுளூட் என்னும் கருவி வீணைக்கு இணையாகுமா? லிலிபுளூட் ஓரற்பமலிந்த போதக் கருவியன்றோ. அது கையாளுதற்கு எளிதேயாயினும், அதன் அமைப்பிலக்ஷணத்தைக் கொண்டு அஃதிந்திய சங்கீதத்துக்கு உள்ளவாறு இசைந்ததாகாதென்று எளிதிலே நிரூபிக்கலாமென்றாற் பின்னர்ப் பேசுவதென்னை? நேற்று உள்ளூர்ப் பாடகனொருவன் வாத்தியக் கருவியோடு பாடுவதற்கு என்னிடம் வந்தான். அவனைத் தமிழ் ராகம் பாடச் சொன்னேன். அவன் நான்கு முறை போலும் இங்கிலீஷ் ராகமே பாடத் தொடங்கினான். அவனைப் பாடாது நிறுத்திவிட்டேன். இங்கிலீஷ் சங்கீதத்தில் மற்று நான் சொல்வதென்னையெனின், எங்களுக்குரிய சங்கீதத்தைக் கைவிட்டு அதனைக் கொள்ளலாகாதென்பதே. இன்னும் இங்கிலீஷ் சங்கீதத்திலுள்ள குணாகுணங்களைத் தேர்ந்துகொள்ளும் பக்குவம் நமக்கு வந்திடவில்லை. காலந்தவறுதிருக்கின் எங்களுக்குரிய சங்கீத வித்தையை ஆதரித்து இந்திய சங்கீதக் கருவிகளை வழங்கப்பண்ணுதற்கு அநுகூலிகளாயிருக்குமாறு உங்களை வேண்டுவன்.

நான் உங்களுக்கு எடுத்துக்காட்டவேண்டிய மற்றொரு துறைக் கல்வியுளது. நாம் யோகமென்னும் பெயரால் அடக்கும் மனோசக்தியை வசப்படுத்தும் கல்வித் துறையை மேலைத்தேசக் கல்வி முறையிற் காண்கின்றிலம். மேலைத்தேசத்து மனோ சிக்ஷை விஷயத்திற்கு ஊனங் கற்பிக்கின்றிலேன். அது நமது முறையினும் அநேக விஷயத்திற் சிறந்ததாகலாம். ஆயினும் கடினபாகமெல்லாம் செவ்வே விளக்கப்பெற்ற சிறு மூலநூல்களைச் சில முக்கியார்த்தமாக அடியோடு உட்கொண்டுவிடுவதும், ஆழ்ந்த ஆராய்வின்றி மேற்போக்காகக் கற்பதும் இக்காலத்து நிச-

சந்தேகமான சார்பாம். ஞாபகசக்தியை வளர்ப்ப திலும், யோக சம்பந்தமாகிய ஏகாக்கிரசிந்தையிலும் மனத்தைக் குவிப்பதிலும் எங்களுக்குரிய முறை மிக மேலானதேயாம். "ஞாபக பங்கத்தால் ஞான பங்கம் வருகின்றது. ஞானபங்கத்தால் ஆத்மநஷ்ட மாகும்" என்பது பகவற் கீதை.

தற்காலத்துக் குறைகளுக்குப் பழைய நூற்பிர மாணமெடுத்துக் காட்டுமிடத்து இதனை மறத்தலா காது. (தற்காலக் குறைகளுள்ளே பௌதிக சாஸ் திரவுணர்ச்சியும் குணகுணங்களை யாராயும் நியாய நூலுணர்ச்சியும் முக்கியமானவைகளாம்.) அவை களை நாடுமிடத்து நம்மிடத்துள்ள நல்லனவாயுள்ள நிதிகளைச் சிறிதுங் கைவிடாதிருத்தல் வேண்டும்.


வித்தியா விஷயத்தையும் அவ்விஷயமாக நமக்கு நாம் செயற்பாலனவற்றையும் விடுத்து மேற்செல்ல முன்னே, அரசினரால் நேரே ஆதரிக்கப்படும் வித்தி யாசாலைகளல்லாத மற்றொரு வகுப்பு வித்தியா சாலைகளைக் குறித்துச் சிறிது கூறுவேன். அவை கிறிஸ்த சமயப் பிரசாரகர் பாடசாலைகள். கிறிஸ்த சமயப் பிரசாரக சபையாருடைய உத்தேசம் பிறரைத் தஞ்சமயிகளாக்குவதேயென்பதும் அதன் பொருட்டே வித்தியாசாலைகளை அவர்கள் வைத்து நடாத்துகின் றனரென்பதும் எடுத்துக் கூறவேண்டா. அற்ப சம் பளத்துக்குக் கற்பிப்பதெல்லாம் அவர்கள் அதி காரத்துக்குள்ளே நம்மக்களை விடுதற்கு நமக்கொரு வசீகரமாமன்றோ. இப்பரிதானத்தில் நாம் மயங்கு வோமாயின், நம் மக்கள் ஐரோப்பிய வொழுக் கத்தை வகிக்குமிடத்தும் கிறிஸ்த சமயம் புகுமிடத் தும் நாம் குறைகூறுவதெங்ஙனம்? வித்தியாசாலை யினீங்கும் காலத்திலே அறியவரும் கிறிஸ்து மார்க் கத்தை முன்னரே தழுவி மாரீசம் பண்ணு மாறு கற்பிக்கப்படுவதும், உத்தியோகந் தேடுங் காலத்திலே அதற்குத் தம்மை அருகர்களாக்கிக் கொள்ளும் பொருட்டுப் பெயரளவிலே கிறிஸ்தவ ராவதும் இதனினும் பெருங் கேடன்றோ. நாம் பார்க்க வேண்டிய நம் கருமத்தைக் கிறிஸ்த பிரசாரக சபையார் முடித்துத் தருவரென நம்பி ஒப்பிப்பது நமக்கு அழகுமன்று பெருமையு மன்று. எங்கள் தேசத்துக் கல்விக் கருமம், யாதொரு வகை மாறுபாடும் வேறுபாடும் கருத்திடை வையாது பரோபகாரிகள் கையில் முழுது மேறும் வரையும் நாஞ் செய்ய வேண் டிய முயற்சிகளையெல்லாஞ் சிறிதுந் தளர்வின்றிச் செய்தல் வேண்டும். கிறிஸ்த பிரசாரகருள்ளே யான் கூறுங் குற்றத்திற்குட்படாது தமது மதத்திற்குப் பிறரையிழுக்க வேண்டுமென்னும் உத்தேசத்தைப் பெரிதும் பொருள்பண்ணாது, மாணுக்கர்க்கு நல்ல கல்வியும் மேலான ஒழுக்கமும் கற்பிக்கவேண்டுமெனப் பெரிதும் முயலுகின்றவர்களும் உளரென்பதறிவேன். ஆயினும் அவர்களோ மிகச் சிலர். அவர்கள் பிரசாரகசபையினது முயற்சியின் பெயர் மாத் திரைப் பயனுகவுள்ளவர்களல்லர். கண்டி "டிறி னிற்றி" கல்லூரித் தலைமையாசிரியர் போல் பவர்கள் நம் அபிமானத்திற்கும் மெச்சுரைக் கும் பாத்திரராயுள்ளவர்கள். ஆயினும் நங் கருமத்திற் பிறரை நம்பியிருத்தலாகாது. ஓரொ ருவர் உத்தமராயிருப்பினும் அவர் நிலைப்பவ ரல்லர். அவர் போன பின்னர் அவரிடத்துக்கு வருபவர் அவர்போல்பவராக வந்தாலன்றி நமது கருமம் வாய்ப்புடையதாகாது.

பெயர்படைத்த ஆங்கில நூலாசிரியனும் கிறிஸ்தவனுமாகிய "மெரிடித் டவுன்செண்ட்" என்பவன் ஆசிய சனங்களின் கொள்கைகளைப் பற்றி, "கணக்கிலடங்காத பெருந்தொகையாள ராகிய ஜனங்கள் தமது ஆன்ம கருமத்தை அசத்தியமான கொள்கையினுல் நடாத்துகின் ருர்கள்" எனக் கொண்டு கூறியவிடத்துச் சொன்னதை இங்கெடுத்துக் கூறுகின்றேன். "பிர சாரகன் (மிஷனேரி) வித்தியாதானகாரனைப் போலவே தன் மாணுக்கருக்கு ஆங்கில சாஸ் திரங்களை ஆங்கில வித்தையைக் கற்பிக்கவும், அவர்களை ஆங்கிலராக்கவும் கொண்ட பேரவாவை தடுத்தற்கு இயலாதவனுகின்றுன். கீழைத்தேசத் தாரியல்போடு மேலைத் தேசத்தாரியல்பைக் கலந்து விட விரும்புகின்றுன். அதனுல் அவன் முயற்சிப் பயனளவுக்கேற்ப அவனுற் சமயப் பிரஷ்டர்களாகிய வர்களும், அவர்கள் பிள்ளைகளும், அவன்பாற் கல்வி கற்கின்ற ஆயிரக்கணக்கான புறச்சமயிகளா கிய பாலியர்களும், இந்துக்களுக்குரிய இயல்பு பேதித் தும், தமக்குரிய மனேசக்தி கொல்லப்பெற்றும், தமக்குரிய சுவாதீனம் குறைக்கப்பெற்றும், தமது அபிலாசங்களெல்லாம் தங்கருத்து வழிச்செல்ல விடாது அந்நிய வழியிற் புகுத்தப்பெற்றும் ஒரு நூதன சங்கரஜாதியாய் விடுகின்றுர்கள்.

அது சீனர் ஆங்கிலேயரைப் புத்த சமயிகளாக்கு வதோடு தம்மைப் போலச் சீனராகவும் முயல்வது போலாம்."

இதுவே அரசினர் கல்லூரியிலுள்ளதுமாம்; ராஜ கல்லூரியில் (றேயல்) தமிழெங்கே சிங்கள மெங்கே? கேம்பிரிட்சு லோக்கல்களில் அவைக்கு வகுத்த இடமெங்கே? லண்டன் சர்வ கலாசாலை அத்தியயனக்கிரமத்தில் அவைகளுக்

(31 ம் பக்கம் பார்க்க)



காகிதத் தொழிற்சாலே கொழும்பில் ஏற்படுத்தியுள்ள விற்பனே அறையை இலங்கைப் பிரதமர் குத்துவிளக்கேற்றித் திறந்து வைக்கிருர்.

# காகிதத் தொழிற்சாலே

## கொழும்பில் ஒரு விற்பனே அறை

வாழைச்சேனேயிலுள்ள கடுதாசித் தொழிற்சாலேக் கூட்டுத்தாபனத்துக்குரிய விற்பனே அறை ஒன்றை கடந்த மாதம் பிரதமர் திரு. டபிள்யு. தஹாநாயக்க திறந்துவைத்தார். கொழும்பிலுள்ள அல்பெட் கிறெசெண்ட் எனும் வீதியில் இந்த அறை அமைக் கப்பட்டுள்ளது.

அவ்வைபவத்தில் மந்திரிமார், ராஜீய தூதர்கள், வர்த்தகப் பெருமக்கள் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

அச்சமயம் நிகழ்த்திய ஒரு சிறு உரையில், கட தாசித் தொழிற்சாலேத் திட்டத்தை வெற்றிகரமாக் கியதற்காக டைரக்டர் குழு உறுப்பினருக்கும், ஊழி

யர்களுக்கும் பிரதமர் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டார்.

சில வருடங்களுக்கு முன்னர் இத்திட்டத்தைப் பற்றி ஆலோசிக்கப்பட்டபோது, அது வெற்றிகரமாக வருமா என்று தாமே சந்தேகம் தெரிவித்ததாகக் கூறினார். ஆயினும், காலமும் முயற்சியும் அத்தகைய சந்தேகத்தைப் போக்கடித்துவிட்டதுடன், இத்தகைய திட்டங்கள் இன்று வெற்றிகரமாக நடக்கின்றன என்று சொல்லக்கூடிய நிலையிலும் இருக்கிறோம்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தரப்பட்டுள்ள புள்ளி விபரங்களின் படி, முன்னைய மூன்று வருடங்களிலும் ஏற்பட்ட மொத்த உற்பத்தியிலும் பார்க்க 1959 ம் ஆண்டின் உற்பத்தி அதிகமாக இருந்தது எனக் குறிப்பிட்டார். இதிலிருந்து இத்தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்டவர்களின் கடின உழைப்பும், ஒத்துழைப்பு மனப் பான்மையும் புலப்படுகிறதெனவும் தெரிவித்தார்.

"இன்று கடின உழைப்புத்தான் நாட்டுக்குத் தேவை. மற்றைய தொழிற்சாலைகளும் இத்தொழிற்சாலையைப் பின்பற்றி அதிக உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும்" என்றார் பிரதமர்.

கைத்தொழில் அமைச்சர் திரு. ஜே. டீ. வீரசேகர பேசுகையில், இத்தகைய ஒரு தொழிற்திட்டம், வெற்றிகரமாக நடைபெற்று வருவதைக் குறித்து மகிழ்ச்சி அடைவதாகவும், இந்த வெற்றிக்குத் திறமையான நிர்வாகமும், ஊழியர்களின் ஒத்துழைப்பும் தான் காரணம் என்றும் குறிப்பிட்டார். இதர திட்டங்களும் இதனை முன் உதாரணமாக கொள்ள வேண்டும் எனத் தான் விரும்புவதாகவும் கூறினார்.

டைரக்டர் குழுவின் தலைவர் **திரு. கே. சி. தங்கராஜா** நிகழ்த்திய உரை பின்வருமாறு :

இந்த காகித விற்பனைச்சாலை திறக்கப்படும் இவ்வைபவத்தில், கனம் பிரதம மந்திரி, கௌரவ கைத்தொழில் அமைச்சர், பிறநாட்டின் பிரதிநிதிகள் ஆகியோரையும் மற்றும், சொற்ப காலத்தில் கொடுக்கப்பட்டிருந்தும், எங்கள் வரவேற்பையேற்று இங்கு கலந்துகொள்வோரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வாழைச்சேனை காகித தொழிற்சாலையின் முன்னேற்றத்திலும், சீர்திருத்தத்திலும், இன்று நாம் திறக்கும் விற்பனைச்சாலை ஒரு முக்கியமான கட்டத்தை ஏற்படுத்துகின்றது. இது 1959 ம் ஆண்டில் இத்தொழிற்சாலையின் சாதனைகளை ஓரளவு பொது மக்கள் முன்னிலையில் கொண்டுவருகின்றது. இது நாள் வரை இங்கு உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் பொருட்களும், அநேகமாக அரசாங்கத்தின் உபயோகத்திற்காக அரசாங்க பொருள் இலாகாவினரால் எடுத்துக்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது. நிர்வாக அறிக்கைகள், மசோதாக்கள், பத்திரங்கள் இடாப்புகள் ஆகிய பல அரசாங்க வெளியீடுகள் ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் தயாரிக்கப்படும் கடுதாசியிலேயே அச்சிடப்பட்டு வந்திருக்கின்றது. எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட எழுதும் தாள்களும், நகலெடுக்கும் தாள்களும், இன்று அநேகமாக எல்லா அரசாங்க இலாகாக்களிலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இருந்தும் இன்று தொழிற்சாலையில் உற்பத்தியாகும் மேலதிகமான கடுதாசியை விற்பதற்கு வேறு துறைகளை நாடவேண்டியிருக்கிறது. இந்த முயற்சியில் முதல் அடியாக பொது மக்கள் உபயோகத்திற்கு இந்த கடுதாசி கிடைக்கும் பொருட்டு, இன்று இந்த விற்பனைச்சாலை திறக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் கைத்தொழில் முயற்சிகளில், அரசாங்கம் செய்த பெரிய தவறு, காகித தொழிற்சாலைத்திட்டம் எனக் குறை கூறப்பட்டது. நாமே நமக்குத் தேவையான கடுதாசியை தயார் செய்து கொள்ள வேண்டும் என்ற திட்டம் நல்ல திட்டமே எனினும் இதைச் செயல்முறையில் காட்டும்பொழுது பல தவறுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. சில இடங்களில் இந்த தொழிற்சாலை மூடப்படவேண்டும் எனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. உண்மையில் உலக வங்கியின் தூதுகோஷ்டியின் எண்ணங்களை இந்த அபிப்பிராயங்கள் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தன. மூலப்பொருட்களின்மையும் உயர்ந்த உற்பத்திச் செலவும், அனுபவம் பெற்ற உத்தியோகத்தர்கள் இல்லாமையும், இதற்குக்காரணங்களாகக் காட்டப்பட்டன. அன்று கைத்தொழில் அமைச்சராக இருந்த திரு வில்லியம் டி சில்வா, இந்த தொழிற்சாலையின் நிர்வாகத்தை திருத்தியமைக்கும்படி, 1958 ம் ஆண்டு ஜுலை மாதம், என்னையும் என் நண்பர்களையும் கேட்டுக்கொண்டார். வகுப்புக் கலவரங்களினால், தொழிற்சாலையில் அமைதியும் ஒற்றுமையும் சீர்குலைந்து பல அருவருக்கத்தக்க விஷயங்கள் நடந்த அந்த நேரத்திலே, என்னையும் என் நண்பர்களையும் மிகக் கஷ்டமான வேலை எதிர்நோக்கியிருந்தது. அன்றிலிருந்து சில சமயங்களிலே மிகவும் இக்கட்டான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இருந்தாலும், எங்களிடம் பணியாற்றுவோரின் ஒத்துழைப்பின் பயனாக, இந்த இக்கட்டுகளையெல்லாம், பொருட் செலவும், கால நட்டமுமின்றி நாங்கள் வெல்ல

முடிந்ததென மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். இதன் விளைவாக இதற்கு முன்னர் என்றும் இல்லாதவாறு 1959 ம் ஆண்டிலே 4,187 தொன் எழுதும் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டது.

இத்தொழிற்சாலை வேலை 1954 ம் ஆண்டு அப்போது, அரசாங்க கைத்தொழில்களுக்கு பொறுப்பாக இருந்த கைத்தொழில் இலாகாவின் மேற்பார்வையில் ஆரம்பமாயிற்று. 1955 ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதி, இந்த தொழிற்சாலை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட கோப்பரேஷன், 1955 ம் ஆண்டு 19 ம் மசோதாவிற்கிணங்க அமைக்கப்பட்ட ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனிடம் ஒப்புவிக்கப்பட்டது. 1958 ம் ஆண்டு, நாட்டு கைத்தொழில் மசோதாவிற்கிணங்க அமையப்பெற்ற தற்போதைய சபையிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஆரம்பத்தில் செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி, 1956 ம் ஆண்டிலேயே உற்பத்தி ஆரம்பித்திருக்கவேண்டும். ஆனல் பல்வேறு கஷ்டங்கள் காரணமாக 1956 ம் ஆண்டில் 376 தொன்னும், 1957 ம் ஆண்டில் 1,379 தொன்னும், 1958 ம் ஆண்டில் 1,235 தொன்னும் ஆக இந்த மூன்றுண்டுகளிலும் 2,990 தொன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. இது 1959 ம் ஆண்டு உற்பத்தியின் முக்கால் பங்கிற்கும் குறைவு.

1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ந் திகதி தொழிற்சாலை, விற்பனைக்கான காகிதத்தை உற்பத்திசெய்ய ஆரம்பித்தது. அன்றிலிருந்து, பொது விடுமுறை நாட்களையும் பழுதுபார்க்கும் பொழுதும் தவிர மற்ற நாட்களில், எட்டு மணி நேர வேலை செய்வோரால், பிரிவு பிரிவுகளாக இருபத்துநாலு மணி நேரமும் வேலை முழு மூச்சுடன் நடைபெற்று வருகிறது. இயந்திர விற்பனை செய்தவர்கள் நாளுக்கு $12\frac{1}{2}$ தொன் காகிதமே உற்பத்திசெய்ய முடியுமென கணக்கிட்டிருந்தும், 1959 ம் ஆண்டில் இருபத்து நாலு மணிநேரம் தொழிற்சாலை வேலை செய்யும் ஒரு நாளில் சராசரி 16 தொன் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது.

ஒருவருடன் ஒருவர் ஒத்துப்போக முடிவது மட்டுமன்றி, உற்பத்தி செய்வதும் கூட கஷ்டமெனக் கண்ட பல நம்நாட்டு ஊழியர்கள், இறுதியில் இந்த இடையூறுகளையெல்லாம் கடந்து, உற்பத்தியில் ஓர் உயர்ந்த சாதனையை அடைந்துள்ளனர் என்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இத்துறையின் நுண்பணியாளர்கள் தெரிவித்த மாற்றங்களை யேற்படுத்தும் முன்னரே, 1959 ம் ஆண்டில் இந்த உற்பத்தி தொகையான 4,187 தொன் உற்பத்திசெய்யப்பட்டிருக்கின்றது. இவர்கள் தெரிவித்துள்ள மாற்றங்களில் சிலவாயினும் மேற்கொள்ளப்பட்டால், ஆண்டிற்கு 6,000 தொன்னுவது உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று தயார் செய்யப்படும் காகிதத்திற்கேற்ப 40 ல் இருந்து 60 சத விகிதம் வரை இறக்குமதி செய்யப்பட்ட மரத்தூள் உபயோகிக்கப்படுகின்றது. நுண்பணியாளர்கள் தெரிவித்துள்ள மாற்றங்கள் யாவும் செய்யப்பட்டால் இந்த தொகையை 15 ல் இருந்து 30 சத விகிதத்திற்கு குறைத்துவிட முடியும் என எதிர்பார்க்கின்ருேம். 4,187 தொன் காகித உற்பத்திக்காக 3,150 தொன் நெல் வைக்கோலும் 515 தொன் இலுக் புல்லும், 2,309 தொன் இறக்குமதி செய்யப்பட்ட மரத்தூளும் 1,950 தொன் ரசாயனங்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன. 1960 ம் ஆண்டிலே சுற்றுப்புறங்களிலிருந்து கிடைக்கும் 10,000 தொன் நெல் வைக்கோலை உபயோகித்து, இறக்குமதி செய்யப்படும் மரத்தூளின் உபயோகத்தை வெகுவாக குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று இறக்குமதி செய்யப்படும் 750 தொன் ரசாயனங்களை, பரந்தன் ரசாயன உற்பத்திச்சாலை, முழு உற்பத்தியை தொடங்கியதும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்.

உற்பத்திச் செலவு நியாயமான அளவு குறைந்து வருவது ஊக்கமளிக்கக் கூடியதாக இருக்கின்றது. 1960 ம் ஆண்டில் இத்தொகை மேலும் குறைந்து, வாழைச்சேனை காகித உற்பத்தித்திட்டம் லாபத்தை அளிக்கக்கூடியதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1958 ம் ஆண்டு ஜூலை மாதம் புதிதாக அமைக்கப்பட்ட நிர்வாகிகள் சபை இந்த தொழிற்சாலையை ஏற்றுக்கொண்டதும், வான்கூவர், கனடாவிலிருக்கும் பொறியியல் ஆலோசகர்களும், மரத்தூள், காகிதம் ஆகிய வற்றின் வல்லுநர்களும் ஆன சண்ட்வெல் இன்டர் நேஷனல் லிமிட்டட் கோப்பரேஷனின் ஆலோசகர்களாகவும் இருக்கும் இவர்கள் இந்த தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளையும், செயலாற்றும் முறையையும் ஆராயும்படி கேட்கப்பட்டனர்.

ஸ்தலத்திலேயே இவற்றை ஆராய்ந்த ஆலோசகர்கள் பின்வரும் முடிவுக்கு வந்தனர் :

1. வைக்கோலிலிருந்து உயர்ந்தரக எழுதும் காகிதம் உற்பத்தி செய்ய முடியும். இந்த உற்பத்திக்கு பொதுவாக இந்த தொழிற்சாலை உபயோகிக்க பொருத்தமானது.


2. தற்போது வாழைச்சேனைத் தொழிற்சாலையின் உற்பத்திச் செலவு அதிகமாயினும், அவர்கள் தெரிவித்துள்ள சுமார் 30 லட்சம் ரூபாய்கள் வரை செலவாகக் கூடிய மாற்றங்களைச் செய்தால் இதனை ஒரு லாபகரமான முயற்சியாக்கலாம். இந்த மாற்றங்களை இரண்டாண்டுகளுக்குப் பிரித்து செய்யலாம்.

3. இதனை லாபகரமாக மாற்றமுடியுமென்பதாலும், காகிதம் வாங்குவதற்காக நாம் பிற நாட்டிற்கனுப்பும் பணத்தை சேமித்து நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவவும், நாட்டில் பலருக்கு வேலை யளிக்கின்றது என்பதாலும், தொடர்ந்து இத்தொழிற்சாலை செயலாற்ற வேண்டும்.

4. தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் காகிதப் பொருட்கள் விலை போகக் கூடியதாகவும் மூலப் பொருட்களுக்கேற்ப உயர்ந்த ரகமாகவும், காகிதம் உற்பத்தி செய்வதே கோப்பரேஷனின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்த தொழிற்சாலையின் ஒரு உப உற்பத்திப் பொருளாக வைக்கோலை உபயோகித்து தடித்த அட்டைத் தகடுகள் (கார்ட் போட்) உற்பத்தி செய்வதையும் கோப்பரேஷன் கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த திட்டம் செயல்பட முடியாமைக்கு நிர்வாகத் திறமைக் குறைவே காரணம் என அவர்கள் தெரிவித்தார்கள். நிர்வாகிகள் சபையும் அவ்வாறே

காகிதத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட தாள்கள், கொப்பிப் புத்தகங்களைப் பிரதமர் பார்வையிடுகிறார்.



அபிப்பிராயப் பட்டமையால், வாழைச்சேனை தொழிற்சாலையின் நிர்வாகத்தையும், ஊழியர்களின் நிலையையும் திருத்தியமைக்கும் பொருட்டு, இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் நிர்வாகப் பிரிவின் உதவியை நாடியது.

1959 ம் ஆண்டில், அதிகரிக்கப்பட்ட உற்பத்திக்கும், நிர்வாகிகளுக்கும் ஊழியர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள நல்லுறவிற்கும், நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களும் ஓரளவு காரணமாகும்.

எழுதும் கொப்பிப் புத்தகங்கள் உற்பத்திசெய்து விநியோகிக்கும் ஒரு திட்டத்தையும் சபை ஏற்படுத்தியுள்ளது. பல உள்நாட்டு உற்பத்தியாளர்களுடன் ஏற்பாடு செய்து பரீட்சார்த்தமாக 15 லட்சம் கொப்பி புத்தகங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. 40 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகம் 11 சதமாகவும், 80 பக்கங்கள் கொண்ட புத்தகமொன்று 22 சதமாகவும், இப்பொழுது விற்பனைக்கிருக்கின்றது இன்று விற்பனைக்கிருக்கும் மற்ற புத்தகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, விலையிலோ அன்றி தரத்திலோ இவை அவற்றை ஒத்திருக்கின்றன. இந்த புத்தகங்களை இந்த தொழிற்சாலையிலேயே உற்பத்தி செய்யமுடியுமானால், இப்புத்தகங்களின் விலையை இன்னும் குறைக்க முடியும். உற்பத்திச் செலவு குறைவினால் ஏற்படும் மிகுதியை இறுதியில் பொது மக்களே பெறுவர். இப்பொழுது இதன் பலனை, பாடசாலை செல்வோர், மிகக் குறைந்த விலையில் புத்தகங்களைப் பெற்று அனுபவிக்க முடியும். நாட்டின் இன்றைய கொப்பிப் புத்தகத்தேவையில் அரைப் பங்கை, இறக்குமதி செய்த காகிதத்திலிருந்து உற்பத்தி செய்யும், உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பற்றியும் சபை கவனம் செலுத்தியிருக்கின்றது. இவர்கள் தொழிலைப் பாதிக்காத வகையில், இன்று இறக்குமதியாகும் தொகையான புத்தகங்களை மட்டுமே கோப்பரேஷன் உற்பத்தி செய்யும். மேலும் உள்நாட்டு கொப்பி புத்தக உற்பத்தியாளர்கள், கோப்பரேஷனிலிருந்தே காகிதத்தை வாங்கி கொப்பி புத்தகங்களைச் செய்யலாம். இந்த திட்டத்தை நிதியமைச்சும், கைத்தொழில் அமைச்சும் ஏற்றுக் கொண்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

நமது பொறியியல் ஆலோசகர்கள் தெரிவித்துள்ள ஆலோசனைகளையும், இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் நிர்வாகப் பிரிவின் ஆலோசனைகளையும் அடுத்த சில மாதங்களிலே செயலாக்க வேண்டும் என சபை எண்ணியிருக்கின்றது. இதன் பயனாக உற்பத்தி 5,500 தொன்னாகப் பெருகுமென்றும், காகிதத்தின் திறனையும், கெட்டித் தன்மையும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி உற்பத்திச் செலவையும் குறைப்பதால் நாம் இறக்குமதியாக்கும் காகித விலையுடன் போட்டியிடமுடியும். மேலும், கொப்பி புத்தகம் சரிபண்ணும் இயந்திரமும், காட்போர்ட் செய்யும் இயந்திரமும் நிர்மாணிக்கப்பட்ட பின் இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ள வெற்றியளிக்கும் திட்டங்களில், இது மிகவெற்றியளிக்குமொரு திட்டமாக இருக்கும்.

நமது ஆலோசகர்களான சண்ட்வெல் இன்டர் நெஷனல் ஸ்தாபனத்தார், இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் நிர்வாகப் பிரிவினர் ஆகியோரின் உயர்ந்த ஆலோசனையும், உதவியுமின்றி இதுவரை நாம் ஈட்டியுள்ள பெறுபேறு கிடைத்திருக்க முடியாது. இந்த சந்தர்ப்பத்திலே அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த சந்தர்ப்பத்திலே, நிர்வாக சபையினரின் சார்பில், நான் எங்கள் சபையின் கீழ் வேலை செய்வோரும், தொழிற்சங்கங்களும், உற்பத்தியில் மட்டுமின்றி, தொழிற்சாலையின் நன்மைக்கும், முன்னேற்றத்திற்கும், நிர்வாகிகளுக்கு அளித்த ஒத்துழைப்பை இங்கு கூற விரும்புகின்றேன். இறுதியில், விற்பனைச்சாலையைத் திறந்துவைக்க ஒத்துக் கொண்டமைக்காக கனம் பிரதம மந்திரியவர்களுக்கும், இங்கு சமூகமளித்தமைக்காக கௌரவ கைத்தொழில் அமைச்சருக்கும், இங்கு வந்துள்ள ஏனைய பிரமுகர்களுக்கும், தங்கள் வேலைக்கிடையே இங்கு வந்துள்ள வர்த்தகர்களுக்கும், நிர்வாக சபையின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன்.

# இலங்கைச் சரித்திரக் கதைகள்

திரு. வை. முத்துக்குமாரசுவாமி அவர்கள்

## மானவம்மனும் பல்லவரும்

### கதை

6 ம் நூற்றுண்டு தொடக்கம் 8 ம் நூற்றுண்டு வரையும் சிங்கள நாட்டில் அரசர் அநுரதபுரத்துச் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதற்காக ஒருவரோடு ஒருவர் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒவ்வொரு பக்கத்தினரும் தென்னிந்தியாவின் தமிழ்ப் படைகளின் உதவியை நாடி நின்றனர். பல்லவர் இலங்கை மீது 7 ம் நூற்றுண்டு ஆரம்பத்திலே படை எடுத்தனர். சீல மேக வண்ணன் (சி. பி. 614—623) வரையும் அநுரதபுரத்தில் ஆண்ட பொழுது கதிரைமலை என்னும் கந்தரோடையை ஸ்ரீநாகன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். ஸ்ரீநாகன் பல்லவ அரசனுகிய சிங்க விஷ்ணுவினுடைய உதவி கொண்டு அவன் சேனைகளுடன் வந்து சீல மேக வண்ணனை எதிர்த்துத் தான் உயிரை இழந்தான். சிங்கள அரசர்களுக்குள்ளே உட்பகை விளைந்த காலத்தில் இரு பகுதியாரினதும் தமிழ்ப் படைகளைப் பரிபாலிக்கப் புத்தபள்ளிகளின் பொருள்களெல்லாம் கவரப்பட்டுச் செலவழிக்கப்பட்டன. சில நாளில் தமிழரே சிங்கள மன்னரின் மந்திரி பிரதானிகளாக நியமிக்கப்பட்டனர். அன்றியும், தமிழர்கள் அதிகாரம் மேலோங்கியது. தமிழ் அதிகாரி பொட்டுக் கூத்தனின் அதிகாரம் அரசர்களைக் கைப்பொம்மைகளாக மாற்றி வைத்த காலம். பொலநறுவையில் 2 ம் காசியப்பன் (கி.பி. 652–662) இறந்தபின், அரசு எய்திய தப்புலன் (கி. பி. 661—664) தமிழதிகாரிகளை நீக்கத் தொடங்கினன். அப்பொழுது 1 ம் தாதோபதீசனின் மருமகனுகிய ஆதாடத்தன் என்னும் அரசன், இந்தியாவுக்குப் போய் தமிழ்ச் சேனையுடன் வந்திறங்க, இலங்கையில் உள்ள தமிழர் எல்லாம் அவனுடன் சேர்ந்து அரசுரிமையை அவனுக்கு கொடுத்து 2 ம் தாதோபதீசன் என மணி மகுடம் சூட்டினுர்கள். இதனை அறிந்த இலங்கை அரசன் 2 ம் காசியப்பன் மகன் மானவம்மன் உத்தரதேசம் எனப்படும் வட இலங்கைக்குச் சென்று கதிரமலையில் மறைவில் வாழ்ந்து வந்தனன். சோழ நாட்டின் ஒரு பகுதியாகிய தொண்டை நாட்டின் வடபகுதியில் பல்லவர்கள் வாழ்ந்து வந்தனர். இந்த நாட்டின் பிரதம நகர் காஞ்சி. சோழ அரசன் ஒருவன் நாக கன்னிகையைக் காதலித்தபேறு, இளந்திரயன். இவன் வழி வந்த மக்களே பல்லவர். பல்லவரின் செல்வாக்கு 2 ம் நூற்றுண்டில் இந்தியா வெங்கும் பரவிவந்தது. இது சாளுக்கியருக்குப் பிடிக்கவில்லை. 2 ம் புலிகேசி என்னும் சாளுக்கிய மன்னனுக்கும் சிம்ம விஷ்ணுவின் மகனுகிய 1 ம் மகேந்திர வர்மனுக்கும் போர் மூண்டது. புலிகேசி மகேந்திர வர்மனை வென்று பல்லவர்களிடம் இருந்து வேங்கி நாட்டைப் பிடித்துக் கொண்டான். நரசிம்மவர்மன் என்பான் கேந்திர வர்மன் மகன். அவன் காலம் கி.பி. 630–638. பல்லவ நாட்டின் சிறந்த வீரன். கி.பி. 642 ல் சாளுக்கியருக்கும் பல்லவருக்கும் இடையில் போர் தொடங்கிற்று.

**கட்டி :** இராஜ இராஜன் பல்லவ நாட்டு மன்னர் நரசிம்ம வர்மன் வருகிருர். . . . .பராக்.

**அவை :** பூபாலரே வாழ்க !

**நரசி :** ஐம்பெருங்குழுவினர்களே ! எங்கள் நாட்டின் பெருமை மிக்க அமைச்சர்களே !

புண்ணியம் மிக்க புரோகிதர்களே ! வீரம் மிகுந்த சேனுதிபதியர்களே ! கண்ணியம் மிக்க தூதர்களே ! சாணக்கியத்தில் வல்ல சாரணர்களே ! நான் உங்களை வரவழைத்த முக்கிய காரணம் உங்களுக்குப் புலனுக இருக்கலாம் அல்லவா ?

**அமை :** மன்னவா ! துங்கபத்திரை யாறு முதல் நர்மதை நதி வரையும் வாழுகின்ற எங்கள் பல்லவ நாட்டினர் மேல் சாளுக்கியர் அடிக்கடி படை எடுத்து வந்த வண்ணமே இருக்கின்றுர்கள். அதற்குப் பரிகாரம் கண்டு பிடிக்கத் தான் எங்களை அழைத்தீர்கள் என்பதுதான் எமது கருத்து.

**நரசி :** சரியாகக் கூறினீர் முதல் அமைச்சர் அவர்களே ! இப்பொழுது உள்ள சூழ்நிலையில் சாதனங்களும், சேனையும் காலமும் தொடங்கும் உபாயமும் பொருத்தமாக இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து கூறுங்கள்.

**அமை :** வேந்தே ! படையும், குடியும், பொருளும், அமைச்சும், நட்பும், அரணும் என்னும் ஆறு அங்கங்கள் சிறந்த நாட்டில் இருக்க வேண்டியன. அவையாவும் தங்கள் இராச்சியத்தில் உண்டு.

**நரசி :** நிலத்தை ஆள்பவருக்கு வேண்டிய குணங்கள் யாவை ?

**அமை :** வேந்தே ! அரசருக்கு இயல்பாவது வல்லமை, ஈகை, அறிவு, மனவெழுச்சி என்பனவாகும். மேலும் நிலத்தினை ஆள்பவனிடம் இருக்க வேண்டியவை, எக்காரியங்களிலும் விரைவுடைமையும், அவற்றை அறிதற்கு ஏற்ற கல்வியுடைமையும், துணிபு எனப்படும் ஆண்மையுடைமையும் ஆகும். அவையாவும் தங்களிடம் நிறைவாக உண்டு.

**நரசி :** வேண்டுவாருக்கு வேண்டுவனவற்றைக் கொடுப்பது என் இயல்பு. எனது நாடு கலைக் கோயிலாகத் திகழ வேண்டும், வடமொழியும் விஷ்ணுகோவில்களும் பிராமணர்களும் ஆதரிக்கப்படல் வேண்டும்.

**அமை :** வேந்தர் விளக்கே ! பல்லவ நாடு எல்லா நாடுகளிலும் தலை சிறந்த நாடாக விளங்குகிறது.

**காவ :** வேந்தர் பெருமானே ! இலங்கை அரசகுமாரன் மானவர்மன் தங்களைக் காணக் காத்திருக்கிறார்.

**நரசி :** அவரை அழைத்து வா.

**மான :** பல்லவநாட்டின் வேந்தரே ! வாழ்க ! என் வணக்கம். அன்புள்ள மன்னரே தங்கள் சேவையில் ஈடுபடவே வந்தேன். தங்கள் நாட்டின் வெற்றிக்காக என் உடல், ஆவி இரண்டையும் அர்ப்பணம் செய்யச் சித்தமாக உள்ளேன்.

**நரசி :** நல்ல சமயத்தில் வந்தீர் ! எனது படைகளில் ஒரு பகுதிக்குத் தலைவராக உம்மை அமர்த்துகிறோம்.

(4 சாரணர் வருகின்றனர்)

**1 ம் சாரண :** வேந்தே ! சாளுக்கிய மன்னன் புலிகேசியின் படைகள் கிழக்கில் இருந்து காஞ்சி நகரத்தை நோக்கி வருகின்றன.

**2 ம் சாரண :** அரசரேறே ! சாளுக்கியர் படைகள் மேற்குத் திசையில் இருந்து எங்கள் நாட்டை நோக்கி வருகின்றன.

**3 ம் சாரண :** மன்னாதி மன்னவ ! எங்கள் பகைவர்கள் பரிகளுடனும், கரிகளுடனும், வில் வீரர்களுடனும் தேர்களுடனும் எங்கள் நாட்டின் வடக்கு எல்லையைக் கடந்து விட்டனர்.

**சிங்கவர் :** மகா சேனாதிபதி பரஞ்சோதியார் அவர்களே ! நாம் இத்தருவாயில் என்ன செய்ய வேண்டியது ?

**பரஞ்சோ :** வேந்தே ! அறிவும், நிறையும் ஓர்பும் கடைப்பிடி என்னும் ஆண்மைக் குணங்களுக்கு நாம் பாத்திரர்களாக இருக்க வேண்டும். யுத்தத்தில் நாம் சில அரச தந்திரங்களைக் கையாளுதலே சிறந்த புத்தியாகும்.

**நரசி :** சேனைத் தலைவரே, என்ன தந்திரத்தை நாம் கையாள வேண்டும் என்பதை தெளிவாகக்கூறுங்கள்.

**பரஞ்சோ :** வேந்தர் பெருமானே ! பகைவனது முதல் வேகத்தை எதிர்க்காது விடுத்து, அவன் களைப்புறும் பொழுது எதிர்த்துத் தாக்கி அழித்தலே சிறந்த யுக்தி யாகும். நாம் பகைவர்களை எங்கள் நாட்டுக்குள்ளேயே வரவிடுவோம்.

**நரசி :** அதுவே தலைசிறந்த யோசனை என நினைக்கிறேன். ஈழ நாட்டு அரசகுமாரன் மானவர்மனை உங்கள் உதவிப் படைத் தலைவனாக நியமித்துள்ளேன்.

**மான :** மன்னவ ! தங்களுக்கு என்ன வகையாகச் சேவை செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படிச் செய்யச் சித்தமாக இருக்கிறேன்.

**கதை :** சாளுக்கியர் காஞ்சிமா நகரத்தை நோக்கி வந்தனர். பல்லவரின் படைகள் காஞ்சி நகரக் கோட்டைக்குள்ளே இருந்து விட்டன. புலிகேசியின் படைகள் தாங்கள் இலகுவாக வெற்றித் தம்பம் நாட்டலாமென மனப்பால் குடித்தனர். பல்லவர்களைப் பேடிகளென நினைத்தனர். ஆகவே சாளுக்கிய படைகள் பல்லவ நாட்டின் தென் எல்லையாகிய காவேரியாறு சென்று சில நாட்கள் ஓய்வு எடுத்துக்கொண்டனர்.

நரேந்திர சிம்மன் தன் படைகளைச் சில கூறுகளாகப் பிரித்து பரஞ்சோதியார் தலைமையிலும், மானவர்மன் தலைமையிலும் அனுப்பினான்.

சாளுக்கியருக்கும் எவ்வளவு படைப்பலம் இருந்தும் உள்நாட்டு மக்கள் பகைமையினால் படைகளுக்கு உணவுப் பலம் கிடைக்கவில்லை. சாளுக்கியர் தம் பகைவராகிய பல்லவர் நடுவில் சிக்கிக் கொண்டு தவித்தனர். இந்த நிலையில் பல்லவர்கள் பகைவரை மணிமங்கலம் என்னும்

இடத்தில் சந்தித்துக் கொடும்போர் நிகழ்த்தினர். மானவர்மன் தன் உயிரைத் துரும்பாக மதித்துப் போராடினுன். பரஞ்சோதியாரும் மானவம்மனும் பகைவரை விடாது துரத்திச் சென்று வாதாபி என்னும் நகரைக் கைப்பற்றினர். அரசன் மனைச் செல்வங்கள் யாவும்—கரிகள் பரிகள் முதலியன பல்லவர் கைப்பட்டன. அங்கு பல்லவ சேனுதிபதி பரஞ்சோதியார் வெற்றித் தம்பத்தை நாட்டினுர். அதில் "வாதாபி" "நரசிம்மவர்மன்" என்ற சொற்கள் இன்னும் படிக்கத் தக்கனவாக இருக்கின்றன. வாதாபி 13 வருடகாலம் பல்லவர் ஆட்சியில் இருந்தது.

நரசிம்மவர்மன் அரண்மனை

**எல்லா :** நரசிம்ம வர்மனுக்கு ஜே! வாதாபி கொண்டவருக்கு ஜே! பல்லவ நாட்டு வேந்தருக்கு ஜே!

**நரசி :** மானவம்மரே! "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது"

நீர் எமது நாட்டுக்கும் எம் மக்களுக்கும் துணையாக இருந்து பகைவர்களாகிய சாளுக்கியரை எதிர்த்துப் புரிந்த வீரச் செயல்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யலாம்.

**மான :** வேந்தே! எனது தாய் நாட்டின் சிம்மாசனத்துக்குப் பலர் போட்டியிட்டு வருகின்றனர். சில அரசர்கள் அரசியல் பொம்மைகளாக மாற்றப் பட்டு வருகிருர்களாம். எமது உரிமையைப் பெற, படைகளும் கப்பல்களும் தந்து உதவும்படி கோருகின்றேன்.

**நரசி :** மானவம்மரே! ஒரு முறை அல்ல, பல முறை உதவச் சித்த முள்ளவஞக இருக்கிறேன். உற்ற சமயத்தில் ஏற்ற உதவி செய்த நண்பன் என்றே உம்மை நான் மதிக்கின்றேன்.

**மான :** மன்னவ! வேண்டிய நேரத்தில் செய்த உதவி சிறிதேனும் அதன் பெருமை மிகப் பெரியது என்பதை நான் உய்த்துணர்கிறேன்.

**நரசி :** அமைச்சர் அவர்களே! மானவம்மருக்குச் சிறந்த படையாட்களேயும் போதிய கப்பல் களேயும் மாமல்லபுரத்தில் ஆயத்தமாக இருக்கும்படி ஆவன வற்றைச் செய்க.

**அமைச் :** மகிப! தங்கள் ஆணையை நேரம் தாழ்த்தாது நிறைவேற்றி வைக்கிறேன்.

**கதை :** மகாபலிபுரம் பல்லவ நாட்டின் சிறந்ததுறை முகமாகும். அங்கு நரசிம்மவர்மன் அமைத்த அழகிய கோயில்களில் சிற்பக் கலேயின் அருமையான வேலேத் திறன் மிகவும் சிறப்பாகக் காணப்படுகின்றது. மாமல்லபுரத்தில் இருந்து கப்பல்கள் தமிழ்ப்படைகளுடனும் மானவம்மனுடனும் புறப்பட்டன. அவை நீண்ட வரிசையாகப் புறப்பட்டதை இமைகொட்டாது நரசிம்மவர்மன் பார்த்துக் கொண்டிருந்தான். மானவம்மன் வட இலங்கைத் துறைமுகம் ஒன்றில் இறங்கி அனுரத புரத்துக்கு சென்று போர் தொடுத்தான். ஆயின் அவனுக்கு வெற்றி கிடைக்கவில்லே. மானவம்மனின் தமிழ்ப் படைகள் காஞ்சி நோக்கிச் சென்றன. ஆகவே இன்னெரு முறை மானவம்மன் நரசிம்மவர்மனிடம் சென்று சேவை செய்து தனக்கு உதவி நாடினுன். அம்மன்னன் மறுபடியும் 676 ல் ஒரு பெரிய கப்பற் படை கொடுத்து மானவம்மனே இலங்கைக்கு அனுப்பினுன். இம்முறை கப்பல்கள் 20 மைல் நீளத்தில் நின்றன.

பொலநறுவையில் பொட்டுக்கூத்தன் என்னும் தமிழ்ப் பிரபு தனபத்துதத்தன் என்பவனே அரச பீடத்தில் ஏற்றி வைத்திருந்தான். அதன் பின் ஆத்தாடத்தனே அரசனுக்கினுன். மானவம்மன் இரண்டாம் முறை பல்லவ அரசனின் தமிழ்ப் படைகளுடன் வட இலங்கையின் ஒரு துறைமுகத்தில் இறங்கி வட இலங்கையைக் கைப்பற்றினுன். வட இலங்கையில் உள்ள தமிழர்கள் அவனுடன் சேர்ந்து, 2 ம் தாதோபதீசன் என்னும் பெயர் பூண்டுள்ள ஆத்தாடத்தன் படைகளுடன் போர் புரிந்தான். பொட்டுக் கூத்தன் படைகளும் ஆத்தாடத்தன் படைகளும் சேர்ந்தன. மானவம்மன் பொட்டக்கூத்தனேயும் தாதோபதீசன் படைகளேயும் பிரித்து அவைகளே ஓட்டம் பிடிக்கச் செய்தான். ஆத்தாடத்தன் சிரசு கொய்யப்பட்டு மானவம்மனுக்குக் காட்டப்பட்டது. பொட்டுக் கூத்தன் தான் தப்புவதற்காக மேறு கந்தரையில் உள்ள தன் நண்பனுகிய ஒரு தலேவனிடம் ஓடினுன்.

**கூத்த :** நண்பரே! அரசியலாகிய சதுரங்க விளேயாட்டில் யான் பல சிங்கள அரசர்களேப் "பொம்மைகளாக" வைத்து ஆடினேன். ஆனல் அந்த நாட்கள் முடிந்துவிட்டன. இப்பொழுது நண்ப! உம்மிடம் சரண் புகுந்துள்ளேன்.

**தலை :** பொட்டுக் கூத்தரே ! " தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை யாகக் கொள்வர் பயன் தெரிவார் " என்பது எனக்கு நன்றாகத் தெரிந்த விடயம்.

நீண்ட நாள் நீங்கள் செய்து வந்த உதவியை நான் மறவேன்.

**கூத்த :** ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுது கை சென்று உதவுமாப் போலத் துன்பத்தைக் களைவதே நண்பரின் கடமை. அதைச் செய்ய முன் வந்ததற்கு எமது இதயம் கனிந்த நன்றி. இதோ மானவம்மன் வருகிறார். நான் மறைவாக இருக்கிறேன்.

**மான :** மேருகந்த தலைவரே ! பொட்டுக் கூத்தன் இங்கு வந்தனரா ? என் மௌனம் சாதிக்கிறீர்?

**தலைவ :** (தனக்குள்) இரு தலைக் கொள்ளி எறும்பு போல் என்பாடாயிற்று. எமது அரசரிடம் எப்படிப் பொய் வார்த்தை கூறுவது ? எப்படி எனது நண்பனைக் காட்டிக் கொடுப்பது ? யான் நஞ்சுண்டு இறப்பதே நன்று.

**கூத்த :** என் பொருட்டுத் தன் உயிரை விட்டான் ! இனி மேல் நான் உயிருடன் இருப்பதில் என்ன பயன் " எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றிகொன்றமகற்கு. "

(28 ம் பக்கம் பார்க்க)

**இந்திய சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொள்ள வந்து சேர்ந்த இலங்கைப் பிரதமரை, இந்திய ஹைகமிஷனர் திரு. கண்டேவியா அவர்கள் வரவேற்கிறார்கள்.**



# நூல் நிலையப் பிரசாரம்

திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள்

மக்கட்குக் கண் போன்றது கல்வி யென்பது நமது நாட்டுப் பெரியோர்கள் கொண்டுள்ள கருத்து. இது மிக அழகியதோர் உபமானமாகும். இதனால் வற்புறுத்தப்படும் உண்மை ஆழ்ந்து சிந்தித்தற் குரியது. உயிரினங்கட்கெல்லாம் கண் இன்றியமை யாத உறுப்பு. ஒருவனுக்குக் கண்ணில்லையேல், நுகர்தற்குரிய நலங்களெல்லாம் அவனுக்குப் பயன் படாது ஒழிகின்றன. இயற்கைவனப்புக்களெல்லாம் அவன்பாற் சிறிதும் உணர்ச்சியை யெழுப்பமாட்டா தனவாய்க் கழிகின்றன. வானத்தில் ஒளிப்பிழம் பாய்த் திகழும் சூரியனை யறியமாட்டான்; இரவில் நக்ஷத்திரங்கள் புடைசூழ வான வீதியில் உலவி நின்று இன்புறுத்தும் சந்திரனை அறியான்; பூமியை ஒரான்; மலைகளை யுணரான்; கடலினைக் காணான்; வீட்டினை யறியான்; தன்னுடன் பயிலும் மக்களையும் அறியான்; செறிந்த அந்தகாரமானது அவனை யெங்கும் சூழ்ந்திருக்கின்றது. சுருங்கக் கூறின், அவனுக்கு உலக வாழ்வென்பதே இல்லை யாயொழிகின்றது. இங்ஙனமே, கல்வியறிவில்லாத வனும் திணிந்த இருளுலகில் தட்டுண்டு தடுமாறி யுழல்கின்றான்; இவனுக்கும் உலகவாழ்வென்பது இல்லையென்றே கொள்ளலாம்.

இவ்வாறாக, மக்கள் உயிர் வாழ்தற்கே இன்றி யமையாத பெருஞ் சிறப்பினதாயுள்ளது கல்வி யென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததே. ஆனால் எம்முறையில் மக்களைக் கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்; என்பது மிகப் பூர்வகாலந்தொட்டு இன்று வரை ஆராய்ச்சிக்கிடமாய் நின்றுவரும் அரிய விஷய மாயுள்ளது. அரசினரும் சமுதாயத்தின் அபி விருத்தியை நாடும் நல்லறிஞர்களும் மேற்கொண்டு வரும் பெரு முயற்சிகளுள்ளே மிக முக்கியமானது இக்கல்வியைக் குறித்ததேயாகும். கல்வியை மக்க ளிடையே பரக்க விதைத்தற்குத் ற்காலத்தில் மேனாட்டாரால் கையாளப் பெற்றுவரும் அதி நூதன முறைகளுள் ஒன்றாகும் இங்கே விபரிக்கப் புகுகின்ற நூல்-நிலையப் பிரசாரம்.

காலந்தோறும் அவ்வக் காலத்திற் கிடைப்பனவா கிய சௌகரியங்களுக்குத் தக்கவாறு கல்வியைப் பரவச் செய்தற்கு ஒவ்வொரு சாதனம் ஏற்படுவ தாகும். எழுத்துக்களே வழக்கிலில்லாத அதி புராதன காலத்திற் கேள்வியின் மூலமாக அறிவு பரவிவந்தது. இக்காரணத்தாலே முற்காலத்திற் கேள்விஞானம் மிக விசேடமாகப் பாராட்டப்பட்டது. நெடுங்காலத்திற்குப் பின்பு. எழுத்துக்கள் வழங்கப் பெறலாயின. கல்வி கற்க விரும்புவோரது கருத்து இனிது முற்றுதற்கு உரிய கருவிகள் இப்பொழுது கைகூடின. கற்றற்குரியவற்றில் பெரும்பாலன நூல்களாய் அமைந்தன. இவற்றைக் கற்பித்தற் குக் கலாசாலைகள் அங்கங்கே நிறுவப்பெற்றன. "கணக்காயர்" என்பது இக்கலாசாலையில் நூலு ரைப்போர்க்கு முற்காலத்து வழங்கிய பெயர். பின்பு, காலத்தாலும் இடத்தாலும் நிலைபேறுடைய இடங் களே கல்வி-நிலையமாக இருத்தற்குரியன என்ற வுணர்ச்சி தோன்ற, திருக்கோயில்களிற் கல்விச்சாலை கள் அமைக்கப் பெறலாயின. இங்கே பெரும்பா லும் சமயச்சார்பான நூல்களையே ஓதி யுணர்ந்து வந்தனர். 11 ம் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்த முதல் இராஜேந்திரன் வெட்டுவித்த சாசன மொன்று தென்னாற்காடு ஜில்லாவில் எண்ணாயிரம் என்றவூரின் கோயில் மண்டபத்தில் வேதங்கள், கிருஹ்ய சூத்திரங்கள், சாஸ்திரம், வியாகரணம் முதலியவற்றை 340 மாணாக்கர்கள் ஓதியுணர்தற் குரிய வைதிகக் கல்விச்சாலை ஏற்படுத்தப்பட்டமை யைக் கூறுகின்றது. இராஜேந்திரன் போன்று வேறு பல அரசர்களும் கோயிலிடங்களிற் கல்வி நிலையம் நிறுவியுள்ளார்களென்பதைச் சாசனவாயி லாக அறிகிறோம். இவற்றிற் கற்று வந்த மாண வர்கள் "சட்டர்" என அழைக்கப் பெற்றனர். பின்பு காலாந்தரத்தில் வெவ்வேறு சமயத்தைச் சார்ந்த துறவிகள் தாங்கள் வசித்து வந்த மடங் களிற் கல்வியைப் போற்றி நூல்களைத் தொகுத்து வருவாராயினர். இத்துறவிகள் கல்வியின் பொருட் டுச் செய்துவந்த நன்மைகள் மிகப் பல. தாமே ஆசிரியராயிருந்து கைம்மாறு கருதாது கல்வி போதித்து வந்தனர். ஆயுள் முழுதும் மாணவரா யிருந்து இடைவிடாது பயின்று கல்வியை அபி விருத்தி செய்தனர்; அரிய நூல்கள் பலவற்றை யொருங்கு தொகுத்துப் பிரதிகள் பண்ணித் தங்கள் பரம்பரையினர்க்கு என்றும் அழியாத ஞானப் பெரு நிதியை ஈட்டிவைத்தனர்.

இவ்வகை முயற்சிகளாற் கல்வியின் எல்லைப் பரப்பு விரிந்து கொண்டே வந்தது. மடங்கள், கோயில்கள், கலாசாலைகள் முதலியன வித்தியா

தானத்தைத் தாமே மேலிட்டுக்கொண்ட பொறுப்பன்றிப் பிறிதொரு பொறுப்பு மில்லாதனவாயிருந்தன. இவற்றின் பாற் கல்வியை ஒப்பித்துவிட்டு அரசாங்கத்தினர் வாளாவிருப்பது தவறென்றவுணர்ச்சி பிறந்தது. கல்வியின் அருமை பெருமையும் இன்றியமையாச் சிறப்பும் அரசர்களால் முற்காலந் தொட்டே நன்குணரப் பட்டனவேயாம். எனினும், கல்வியிற் சிறந்தோர்களையும் கவிவாணர்களையும் பொருள் முதலியன கொடுத்துப் போற்றி வந்தனரேயன்றிப் பிறவாறு பொதுக் கலாசாலைகள் நிறுவிப் பொதுக் கல்வியைப் போற்றி வருவாராயினர் என்பது கண்கூடு. பிரதான நகரங்கள் பலவற்றில் சர்வ கலா சங்கங்கள் நிறுவப்பெற்றன. இவற்றின் ஆட்சியின் கீழாகக் கல்லூரிகள் பல அமைந்து நின்றன. நல்லறிவுடைப் பெருமக்களது நன் முயற்சியாலும் அரசாங்கத்தினரது உதவியாலும் கலாசாலைகளின் தொகை நாளுக்கு நாள் வர்த்தித்துக்கொண்டே வருவதாயிற்று. ஒவ்வொரு கலாசாலையிலும் நூல்நிலைய மொன்றிருத்தல் நியதியாய் முடிந்தது.

இங்ஙனம் பலவகையாலும் கல்வி ஏற்றமடைதற்குத் தகுதியுற்ற இக்காலத்தில், நூல்கள் பெருகுதற்குரிய சாதனமாகிய "அச்சு யந்திரம்" நமது நாட்டில் மேனாட்டாரால் கொண்டுவரப்பட்டது. அளவற்ற நன்மைகள் இதனால் விளைந்தன. வருடந்தோறும், பல்லாயிரக் கணக்கான நூல்கள் இயற்றப்பெற்று வெளிவருவனவாயின. இந்நூல்கள் பல திறத்தனவாயுள்ளன. அறிவென்னும் எல்லையற்ற பெருங் கண்டத்தினுள்ளே சிறிய சிறிய பகுதிகளை வரம்பு கட்டி மக்களின் வசமாக்கிச் சுவாதீனப்படுத்தின. இந் நூலினங்கள் மிகப் பூர்விககாலந்தொட்டு நாளிதுவரை யுள்ள பெரியோர்கள் பலரும் பற்பல மொழிகளில் நூல் வடிவாயெழுதி வைத்துள்ள கருத்துக்கள் அனைத்தையும் நமக்கு உதவுவனவாயின. இவ்வகை நூல்கள் வெகு விரைவில் நாடெங்கும் பரவுதற் குற்ற பிற சௌகரியங்களும் அமைந்தன.

கல்வி கரையில ; கற்பவர் நாள் சில ;
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து. என்ற செய்யுட்

கருத்து உபசாரமன்றி உண்மையாகவே முடிந்தது.

அறிவினால் ஆராய்ந்து கற்றற்குரிய பொருள்கள் அளவின்றிப் பரந்து கிடப்பினும், துணைக்கருவியாயுள்ள நூல்கள் மலிந்து பெருகினும் கல்வியை நமது நாட்டிற் பரக்க வித்துதற்கு அரசாங்கத்தினரே நேரில் முயன்றபோதினும், நம்மவர்களில் நூற்றுக்கு 3 பேர் வீதமே எழுத்தறியும் அத்துணையளவு கல்வி பயின்றுள்ளார்கள். 32 கோடி ஜனங்களுள்ள நம் நாட்டில் நூற்றுக்கு 97 பேர்கள் எழுத வாசிக்கவுந் தெரியாத நிரக்ஷரகுக்ஷிகளாயிருக்கின்றார்கள். மேலைத்தேயங்களிற் கல்வியறிவில்லாதார் நூற்றுக்கு மூன்றுவீதத்தினுங் குறைந்திருக்க, நமது தேசமக்களை இருள்போற் சூழ்ந்திருக்கும் இவ் அறியாமையைப் போக்குதற்கு, அரசாங்கத்தினரும் கல்விமிக்க நல்லறிஞர்களும் கூடி யொன்றுபட்டு முயற்சி செய்ய வேண்டுவது ஆவசியகமாகின்றது. இம் முயற்சியில் இரு திறத்தாரும் ஒருங்கு போற்றுதற்குரிய பெருங்கருவியாயுள்ளது நூல்—நிலயப் பிரசாரம்.

நகரங்களினும் கிராமங்களினும் அங்கங்கேயுள்ள மக்களின் தகுதிக்கும் அளவிற்கும் ஏற்றவாறு, பலதிறப்பட்ட நூல்களையும் தொகுத்துரைத்து வேண்டியோர்க்கு வேண்டும் சமயத்து எளிதினுதவிக் கல்வி யறிவைப் பரவச் செய்வதே நூல்–நிலையப் பிரசாரத்தின் முக்கிய நோக்கம். அறிவு பெருகி வளர்தற்கு நூல்களைக் காட்டினுஞ் சிறந்த கருவி இல்லையென்றே கூறலாம். ஆசிரியர்கள் பாற் கற்பது ஒரு சிறிதளவாகவே எப்போதும் இருத்தல் கூடும். "ஆசானுரைத்தது அமைவரக் கொளினும் காற்கூறல்லது பற்றலனாகும்" என்றார் பவணந்தியாசிரியர். ஆசிரியரது நல்லுதவி பெரிதும், வேண்டத்தகுவதும் போற்றத்தகுவதுமாகவே யுள்ளது. எனினும், கல்வியெனப்படுவது கற்கும் மாணவன் நூல்களைத் தானே ஓதியுணர்ந்து தானே சிந்தித்து ஆராய்ந்து துணிவதன் பயனாகவே அமையுமென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததாம். ஆகவே, பிறருதவி வேண்டாது தாமே ஓதியுணர்தற்குரிய மக்களிடையே பரவப் பரவ, கல்வியும் பரவி அஞ்ஞானமும் அகன்றொழியும் என்பது கூறவேண்டா.

நூல்—நிலையங்கள் இக்காலத்தே புதிதாக ஏற்படுவனவெனல் பொருந்துவதன்று. கடைச்சங்க நூல்களனைத்தும் தொகை நூல்களாகும். புலவர்கள் பலர் பாடியனவற்றைத் தனித்தனி நூல்களாகத் தொகுத்த காரணத்தாலேயே இப்பெயர் வழங்குதலாயிற்று. கடைச்சங்க நூல்களிற் பெரும்பாலானவற்றைத் தொகுத்தான் இன்னானென்றும் தொகுப்பித்தான் இவ்வரசனென்றும் கூறப்பட்டுள்ளது. தொகை நூல்கள் எழுந்த வரலாறு இதுவாயின், வேறு வேறு காலத்து வேறு வேறிடங்களிற் பலராற் பாடப்பெற்ற நூல்கள் ஓரிடத்தே அரசர் முதலியோரால் தொகுத்துவைக்கப் பெற்றிருந்தன வென்பது உண்மையாகக் கொள்ளக் கூடியதே. இவ்வகை

நூல்—நிலயங்கள் விளங்கிய இடமே சங்கம் என வழங்கப் பெற்றதென்று கொள்ளுதல் பொருந்தும். கடைச்சங்க காலம் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றுண்டென்பர். அக்கால முதற்கொண்டே தமிழ்நாட்டில் நூல்—நிலயங்கள் விளங்கி வந்தனவாதல் ஒப்புக் கொள்ளத் தகுந்ததே. அரசர்களும், ஜனசங்கத்தவரும், தேவாலயகர்த்தர்களும் நூல்—நிலயங்களமைத்துப் போற்றி வந்தார்கள். தேவாரம் என்னுந் தெய்வப் பாடல்கள் சிதம்பரமாகிய திருக்கோயிலுள்ளே சேமித்து வைக்கப் பெற்றிருந்ததென்பது பிரசித்தம். கி. பி. 5 ம் நூற்றுண்டில் வச்சிர நந்தியின் சங்கம் இருந்தமை நன்கறியப்பட்டதே. சீவகசிந்தாமணிக் காலமாகிய 9 ம் நூற்றுண்டினிறுதியிற் சங்கமொன்றிருந்ததும் ஆராய்ச்சியாளர் அறிவர். மடாதிபதிகள் தத்தம் மடங்களிலே நூல்களேத் தொகுத்துவைத்துப் போற்றி வந்தமையும் யாவரும் அறிந்ததே. தஞ்சை அரண்மனையைச் சார்ந்த சரஸ்வதி மஹால் கலைவாணரது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுஞ் சிறப்புமிக்கதொரு நூல்—நிலயமாக இன்றுவரை விளங்கிவந்திருக்கின்றமை நாம் நன்குணர்ந்ததே. எனவே, மக்களால் நூல்களின் ஆவசியம் உணரப்பெற்ற மிகப் பழைய காலந்தொட்டே நூல்—நிலயங்கள் தமிழ் நாட்டில் உள்ளனவென்றே கொள்ளுதல் வேண்டும்.

ஆனல், முற்காலத்திருந்த நூல்—நிலயங்கட்கும் தற்காலத்தில் நிறுவப்பெறும் நூல்—நிலயங்கட்கும் பெரிதும் வேறுபாடுண்டு. நூல்கள் இறந்துபடாமற் காத்தற் பொருட்டு ஓரிடத்துத் தொகுத்து வைத்தலே முற்காலத்துப் பெருநோக்கமாயிருந்தது. பெரும்பாலும் பண்டை நூல்களே இவ்வாறு போற்றிவரப் பெற்றன. இந் நூல்—நிலயங்கள் யாரேனும் ஒருவருக்குத் தனிப்படவுரியவாயிருந்தன. நூல்கள் தவறிவிடா திருத்தற் பொருட்டும் பழுதுபடாதிருத்தற்பொருட்டும் கடினமான நியமங்கள் கையாளப்பட்டு வந்தன. நிலயங்களிலிருந்து நூல்களேப் பெரும்பாலும் இரவல் கொடுப்பதே இல்லே. பொது ஜனங்கள் இவற்றுற் சிறிதும் பயன்கொள்ளத் தகாத முறையில் இவை அமைந்திருந்தன. தற்காலத்து வேண்டப்படும் நூல் நிலயங்களின் நோக்கம் முற்றிலும் வேருகவுள்ளது. பொது மக்கட்குப் பயன்பட்டு அவர்களது கல்வி விருத்தியாக வேண்டுமென்பதே இவற்றின் தனிப்பெரு நோக்கம்.

இந்நோக்கத்தினை முற்றுவித்தற் குரிய உபாயங்களெல்லாம் நூல்—நிலயப் பிரசாரத்திற்கு உரியனவே யாகும். பொது மக்களனைவரது உள்ளத்தையும் கவருமாறு நகரம், ஊர், சிற்றூர் முதலிய பல விடங்களிலும் நூல்—நிலயங்கள் அமைக்கப் பெறுதல் வேண்டும். மக்களின் விருப்பத்தையும் சௌகரியத்தையும் தகுதியையும் நோக்கி அவர்களுக்கு ஏற்ற புத்தகங்களேக் கொடுத்துதவுதல் வேண்டும். அவர்களுக்கு நூல்களில் அபிருசியுண்டாதற் பொருட்டு அவற்றின் நயங்களேக்குறித்து விவரணப் பத்திரிகைகள் வெளியிடுதல் வேண்டும். பரந்துபட்ட அறிவின் பல்வேறு பகுதிகளேப் பற்றிப் புதுப்புது நூல்கள் வெளிவர வெளிவர, அவற்றையெல்லாம் பொது ஜனங்களிடையே பரக்க விதைத்தல் வேண்டும். கல்வியறிவு இன்றியமையாததாகுமென்பதை வற்புறுத்திக் கூறி, அதனை யடைதற்குச் சாதனமாகுங் கருவி நூல்களேக் குறித்து உபந்நியாசங்கள் செய்துவரல் வேண்டும். சுருங்கக் கூறின், அரசியலின் நெறிப்பட்ட ஒரு நாட்டிற் பல திறத்தானும் உத்தம வாழ்வு வாழ்தற்கு வேண்டும் கல்வியறிவனைத்தையும் நூல்கள் மூலம் உதவி வர எல்லாவகையாலும் முயற்சி செய்வதே நூல் நிலயங்கள் மேற்கொள்ளுதற்குரிய தனிப்பெருங் கடமையாயுள்ளது.

இந் நூல்—நிலயங்கள் பலதிறத்தனவாயிருத்தலே தக்கதென்பது வெளிப்படை. குழந்தை முதல் முதியோர் வரையுள்ள அனைவர்க்கும் கல்வி யூட்டுதற்கென நூல் நிலயங்கள் ஆயிரக்கணக்காக ஏற்படுத்தப்பெறுதல் மிக அவசியம். இவைகளேயன்றிக் கல்வித் துறைகள் பலவற்றிற்குந் தனித் தனியே யுரிய நூல்—நிலயங்களும் மிகப் பலவாக நிறுவப் பெறுதல் இன்றியமையாதது. மேலும், பற்பல கல்வித்துறைகளிலும் ஆராய்ச்சிக்கெனத் தனியாயமைந்த நூல்—நிலயங்கள் பல ஸ்தாபிக்கப்பெறுதலும் தக்கதேயாகும். பிற்கூறிய இரண்டு வகை நூல்—நிலயங்களும் சர்வகலாசங்கங்களாலும் கலாசாலைகளாலும் நிறுவப்பெறுதற்குரியன வென்பது கூறுமலே அமையும்.

நமது நாட்டிற் பெரிதும் வேண்டப்படுவதாகும் பிறிதொரு நூல்—நிலயவகையை இங்கே விசேடித்துக் கூறுதல் அமைவுடைத்தென்று எண்ணுகிறேன். அங்கங்கே கிடைப்பனவாகிய ஏட்டு நிலயங்கள் பல முறைபட நிறுவவேண்டுவது மிகப் பெரியதோர் ஆவசியகமாம். இக்கடமையை நாம் வெகுகாலமாக மறந்துவிட்டோம். எத்தனையோ அரிய நூல்கள் பாதுகாக்கப்பெருது அழிந்தொழிந்து போயின. நமது முன்னேர்கள் நமக்கென ஈட்டி வைத்துள்ள பெறற்கருஞ் செல்வங்களே நமது மடமையாலும் மடிமையாலும் பாழ்போக விடுவதாயின் தமிழ் மக்கள் என்னும் பெயர்க்குத்தான் நாம்

தகுதியுடையாராவோமா? இன்னுஞ் சிறிது காலத்தில் இப்போது கிடைக்கும் எடுகள் தாமும் இறந்து போய்விடுமன்றோ! பொதுவிடங்களில் நூல்-நிலையங்கள் அமைத்து எடுகள் பழுதுபடாத வண்ணம் காப்பாற்றி வருதல் நமது பெருங்கடமைகளிலொன் ருகும். இம் முறையில் அரசாங்கத்தினர் எடுத்து வரும் முயற்சி ஒரு சிறிதும் போதாதென்பதை விச னத்துடன் வற்புறுத்திக் கூறவேண்டியதாயிருக் கிறது. மதுரைத் தமிழ்ச்சங்கம் இம் முயற்சியின் கண் பெரிதும் உழைத்து வருகின்றது. எனினும் முயற்சியினளவு போதிய தெனக் கருதக்கூடவில்லை. வருடத்துக்கொரு முறை அளவற்ற எட்டு நூல்கள் நெருப்பினும் நீரினும் அழிவெய்துவதைக் கண்டு வைத்தும் நாம் செயலின்றியிருத்தல் அழகன்று. நமது முன்னோர்கள் இயற்றிவைத்துள்ள அரிய நூற்செல்வங்களைப் பரிபாலிப்பதன்கண் நாம் மேற் கொள்ளவேண்டுங் கடமையை இனியேனும் உணர் ந்து உரியவாறு முயன்றுவருவோமாக.

மேலே விவரித்தனபோன்ற நூல்—நிலையங்கள் நாடெங்கணும் நிரம்புதல் வேண்டும். நமது நாட்டிலே நீடித்துக் குடிகொண்டிருக்கும் அறியா மையைக் கால் தரிக்கவொட்டாது வெருட்டுதல் வேண்டும். அறிவுச்சுடரின் பேரொளி நமது நாடெங் கும் பரந்து வீசுதல் வேண்டும். அறிவின் மூலமாய் ஒற்றுமை மிகுதல் வேண்டும். அறிவு சிறந்து ஒற்றுமைமிக்கு நம்மவர்கள் நல்லின்ப நெறி யில் நிற்றல்வேண்டும். இத்தகைய நோக்கங் கொண்டே நூல்—நிலையப் பிரசாரம் நிகழ்ந்து வரு கின்றது. எல்லாம் வல்ல இறைவன் இப்பிரசாரத் தினை வாழ்வித்தருள்க! நமது தேசீய கவியாகிய பாரதியின் நல்லுபதேசம் நம்மை வழிப்படுத்துக!

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனியநீர்த் தண்சு னைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்

வீடுதோறுங் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடுகல்வி யிலாததொரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கு மமுதமென் னன்னை
கேண்மைகொள்ள வழியிவை கண்டீர்!

# இலங்கைச் சரித்திரக் கதைகள்

(24 ம் பக்கத் தொடர்ச்சி)

**கதை:** இரு நண்பர்களும் அதாவது பொட்டுக்கூத் தனும் மேருகத்தலைவனும் நஞ்சுண்டு இறந்தனர். கி.பி. 676 ல் மானவம்மன் இலங்கை அரசனு னன். இம்முறை வேறெரு அரசருமில்லாதபடி யால் சனங்கள் இவனை விழைந்து ஏற்றுக் கொண்டனர். மானவம்மன் தனது தமிழ்த் தொழிலாளர்களைக் கொண்டு அனுராதபுரத்தை அழகுற அமைப்பித்தான். பல்லவர்கள் அமை த்த சிற்ப வேலைகள் அனுரதபுரத்தில் உள்ள ஈசுருமுனியாவிகாரையில் காணப்படுகின்றன. அங்கு உள்ள இரு காதலர்கள், குதிரைவீரன் முதலியவற்றின் பிரதிமைகள் கொழும்புப் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. யானைகள் குளிப்பதைப் போல் செதுக்கப்பட்ட கற்சிற்ப வடிவங்கள் பல்லவ சிற்பவேலையின் உச்சத் திற்கு எடுத்துக் காட்டுகள். பல்லவர் ஆட்சிக்குச் சான்றுகள் பல்லவராயன்காடு நுளம்பராயர் போன்ற பெயர்களும், கந்தரோடை வல்லிபுரம் போன்ற பழைய நகரங்களில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களுமாம். பல்லவர்களுக்கு அமைந்த சிற்றரசர்களுள் ஒருவனுகிய பிடுகு முத்தரையன் வைரன் மாறன் என்போன், மணலூர் எனப் படும் யாழ்ப்பாணத்தை வென்றுன் என்று கூறும் சாசனம் ஒன்று செந்தலை என்னும் ஊரில் இருக்கிறது.

(வானொலியில் ஒலிபரப்பப்பட்டது).

---

# சுதந்திரதின விழா

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

தாயத்தை உருவாக்கத்தக்க நிலைமையை ஏற்படுத்த முயற்சி செய்து சுதந்திரத்தின் பலனை எல்லோரும் அனுபவிக்கச் செய்வோமாக.

எனது நாட்டு மக்களுக்கு இந்த இலட்சியங்களைப் பொறுப்பளிக்கிறேன். எதிர்காலம் எல்லோருக்கும் சுபமே நடைபெறவேண்டுமென ஆசிக்கிறேன்."

காலிபேஸ் திடலில் செனெற் சபைத் தலைவர், பிரதம நீதியரசர், பிரதமர் ஆகியோர் பத்து மணிக் குமுன் வந்து சேர்ந்தனர். சரியாக 10 மணிக்கு மகாதேசாதிபதி சர். ஒலிவர் குணதிலக்கா பொலிஸ் மோட்டார் சைக்கிள் படை அணிவகுத்து முன்னேவர திடலில் வந்திறங்கியதும் 21 மரியாதைக் குண்டுகள் தீர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் மகாதேசாதிபதி இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டார்.



வெரஹெரையில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வேலை பயிலும் நிலையத்தை மகாதேசாதிபதி அவர்கள் பார்வை யிடுகின்றார்கள்.

# மோட்டார் தொழிற் பயிற்சிக்கூடம்

## ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் அன்பளிப்பு

வெரஹெரையில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வேலை பயிலும் நிலையம் ஜனவரி 28 ஆம் திகதி கவர்னர் ஜெனரல் சேர். ஒலிவர் குணத்திலகாவினால் திறந்துவைக்கப்பட்டது. அச்சமயம் அமைச்சர்கள், பிரமுகர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று திரண்டிருந்தது.

இலங்கையில் உள்ள பெரிய வேலைக்கூடங்களுள் இதுவும் ஒன்று. இதனை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இத்திறப்பு விழா வைபவத்தில் கலந்துகொள்வதற்காக பொண் தலை நகரிலிருந்து துவாடெஸ்கி என்பவரை விசேஷ தூதுவராக ஜெர்மன் அரசாங்கம் அனுப்பி வைத்தது.

வேலைக்கூடத் திறப்பு விழாவின்போது, வேலை பழகும் அறுபது இளைஞர்கள் வேலைக் கூடத்தின் முன்பு அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தினர். தேசியமய சேவைகள், கப்பற் போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும் இ. போ. ச. வின் தலைவர் திரு. வெரோ டி மெல்லும் இதர அதிகாரிகளும் கவர்னர் ஜெனரலை எதிர்கொண்டழைத்தனர்.



வெரஹெரையில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வேலை பயிலும் நிலையத்தை மகாதேசாதிபதி அவர்கள் கடந்த ஜனவரி மாதம் திறந்துவைத்தார்கள்.

கவர்னர் ஜெனரல் அவரது உரையில், வேலைக் கூடத்துக்கு அவசியமான உபகரணங்கள் யாவும் நிறுவப்பட்டு விட்டதாகவும், முதலாவது குழுவினர் வேலை பழகத் தொடங்கிவிட்டனர் என்றும் குறிப்பிட்டார். இவர்களைத் தவிர, ஏற்கனவே சேவையில் உள்ளவர்களுக்கும் குறுகிய கால நினைவுறுத்தல் பயிற்சிகளும் அளிக்கப்படும்.

ஒப்பற்ற உதவியைக் கொடுத்து உதவிய ஜெர்மன் அரசாங்கத்துக்கு கவர்னர் ஜெனரல் நன்றி தெரிவித்ததுடன், இலங்கை அவ்வுதவியினல் பெரும் பயனடையும் எனவும் கூறினர்.

கவர்னர் ஜெனரல் நிகழ்த்திய உரையின் சுருக்கம் வருமாறு :—

வெஹெரையில் உள்ள இப்பயிற்சி வேலைக்கூடத்தைத் திறந்து வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன். ஆலோசனையும் ஆதரவும் கொடுத்து உதவுமாறு இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு இம்மகத்தான உதவியைச் செய்துள்ளது. மேற்கு ஜெர்மனியிலிருந்து இங்கு வந்த ஜெர்மன் நிபுணர்கள் சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து, பொறி இயல் துறையில் தொழிலாளருக்குப் பயிற்சி அளிப்பதற்காக இந்தப் பயிற்சிக் கூடத்தை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு எமக்குக் கொடுத்துள்ளது. இந்த அன்பளிப்பில் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் யந்திரங்களும் உள்ளடங்கியிருப்பதுடன், திரு. வெபர் தலைமையில் ஜெர்மன் பயிற்சியாளர்களும் உள்ளனர். மூன்று வருடங்கள் இங்கு தங்கியிருந்து, எமது நபர்களுக்குப் பயிற்சி அளித்துச் செல்வதற்காக ஜெர்மன் ஊழியர்கள் தம் குடும்பங்களுடன் இங்கு வந்து சேர்ந்துள்ளனர்.

ஜெர்மன் தலைநகரான பொண்நகரிலிருந்து திரு. துராடௌஸ்கி என்பவரை விசேஷ தூதுவராக இதில் கலந்து கொள்வதற்கு அனுப்பி இவ் வைபவத்தைக் கௌரவித்துள்ளது ஜெர்மன் அரசாங்கம்.

பெரும்பாலும் எல்லா உபகரணங்களும் இயந்திரங்களும் நிறுவப்பட்டு விட்டன. முதலாவது குழுவினர் ஏற்கனவே வேலை பயிலவும் தொடங்கி விட்டனர். இவர்களைத் தவிர, ஏற்கெனவே சேவையில் உள்ளவர்களுக்கும் குறுகியகால நினைவுறுத்தல் பயிற்சிகளும் அளிக்கப்படும்.

இலங்கையில் உள்ள இத்தகைய பெரும் பயிற்சிக் கழகங்களுள் இந்தப் பயிற்சிக் கூடமும் ஒன்று.

இந்த ஒப்பற்ற அன்பளிப்பினல் இலங்கை மிக்க பயனடையும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இவ்வுதவி அளித்த நாட்டை நாம் நன்றி உணர்ச்சியுடன் நினைவுபடுத்திக் கொள்வோம்.

---

## வல்லிபுரக் குறிச்சி மத்திய சனசமூக நிலையம், பருத்தித்துறை

10 வது ஆண்டு நிறைவு விழா 23.1.60 சனிக்கிழமை பி.ப. 5 மணி 30 நிமி. தலைவர் திரு. M. C. சுப்பிரமணியம், அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. திரு. M. செல்லப்பாக்கியம் ஆசிரியர் அவர்கள் “ சனசமூக நிலையமும் மாணவரின் கல்வி வளர்ச்சியும் ” பற்றிச் சொற்பொழிவாற்றியுள்ளார். அடுத்ததாகத் திரு. குலேந்திரம் அவர்கள் “ சாதியும் நம் நாடும் ” என்ற விஷயம் பற்றிப் பேசினர். மூன்ருவதாக, திரு. K. பசுபதி ஆசிரியர் அவர்கள் “ மகாசபையும் நம் நாடும் ” என்ற விஷயத்தை மிகவும் விரிவாக எடுத்துக் கூறினர். திரு. K. செல்வத்துரை ஆசிரியர் அவர்கள் கல்வியைப் பற்றிப் பேசியுள்ளார். திரு. S. செல்லையா அவர்கள் “ தேர்தலும் நம் நாடும் ” என்னும் விஷயம்பற்றிச் சொற்பொழிவாற்றினர். திரு. K. டானியல் அவர்கள் “ சாதிக்குள் சாதி ” என்னும் விஷயம் பற்றிச் சொற்பொழிவாற்றினர். கடைசியாக தலைவர் அவர்களின் பேருரையுடனும் செயலாளரின் நன்றியுரையுடனும் கூட்டம் முடிவெய்தியது.

# இலங்கைக்கு ஒரு ரயர், ரியூப் தொழிற்சாலை

மோட்டார் ரயர், ரியூப் தொழிற்சாலை ஒன்றை நிறுவுதற்காக கைத்தொழில், கடற் தொழில் அமைச்சு, மேற்கொண்ட விசாரணைகளின்படி, இலங்கையில் தற்போது 102,300 பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் உபயோகத்தில் உள்ளன. இவ்வாகனங்களின் உபயோகத்துக்காக வருடம் ஒன்றுக்கு 120,000 ரயர்களும், 80,000 ரியூப்புகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

மோட்டார் ரயர், ரியூப் தொழிற்சாலை ஒன்றை லாபகரமாக நிறுவுதற்கு ஓர் தகுந்த சந்தர்ப்பம் இப்போது நிலவுகிறது. மேலே குறிப்பிட்டதிலும் பார்க்கக் குறைந்த எண்ணிக்கையில் ரயர், ரியூப் முதலியன உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகள் இஸ்ரேலிலும், தென் அமெரிக்காவில் உள்ள நாடுகளிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவை லாபகரமாக இயங்கி வருகின்றன.

இலங்கையில் மோட்டார் ரயர், ரியூப் முதலியன வற்றை உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றை அரசாங்க ஆதரவுடன் நிறுவுதற்காக, 1949 இல் ரயர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கக் கம்பனி ஒன்றுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது. கொள்கை அளவில் பொது ஒருமைப்பாடு காணப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்ட குழுவினருக்கு பரஸ்பரம் திருப்தி தரும் வகையில் பேச்சுவார்த்தையைப் பூர்த்திசெய்ய இயலாமற் போயிற்று. அதனால் அத்திட்டம் நிறைவேறுவதிலும் தாமதம் ஏற்பட்டது

இலங்கைக்கு விஜயஞ் செய்த தொழில் நுட்ப தூதுகோஷ்டியுடன் இப்பிரச்சனை விவாதிக்கப்பட்டது. இலங்கைக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட தொழில் நுட்ப கூட்டுறவு ஒப்பந்தத்தில், மோட்டார் கார் ரயர், ரியூப் தொழிற்சாலையை நிறுவுதலும் ஓர் அம்சமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டமும் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திட்ட விபரங்கள் முடிவு செய்வதற்காக சென்ற வருடம் ஜூலை மாதத்தில் இலங்கைக்கு சோவியத் நிபுணர் குழு ஒன்று விஜயஞ் செய்தது· அக்குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்குச் சுமார் ஒன்றரைக் கோடி ரூபா மூலதனம் தேவைப்படும் என மதிப்பிடப்படுகிறது. இதில், சுமார் ஒரு கோடி இருபது லட்சம் ரூபா யந்திர சாதனங்களுக்கும், மிகுதி முப்பது லட்சம் ரூபா நிறுவனங்களுக்கும் செலவாகும் எனக் கருதப்படுகிறது. இம்முதலீட்டினால் ஏறத்தாழ 25 சத வீத லாபம் திரட்டலாம் என மதிப்பிடப்படுகிறது.

ரயர், ரியூப் இறக்குமதியினால் தற்போது அரசாங்கத்துக்குச் சுங்க வரியாக வருடாந்தம் 45 லட்சம் ரூபா கிடைத்துவருகிறது. இந்த இறைவரி வருமானத்தைத் தொழிற்சாலையில் ஏற்படும் லாபம் ஈடு செய்யக்கூடியதாக இருக்கும் என்பதுடன், பலருக்கு வேலைவாய்ப்பையும் அளிக்கும். அந்நிய செலாவணியில் கணிசமான தொகையை மிகுதிப்படுத்தவும் இத்திட்டம் உதவும்.

---

**எங்கள் கடமை**—(15 ம் பக்கத் தொடர்ச்சி)

கிடமுளதா ? எங்களுக்குப் போதிய சுதேச ஒற்றுமையும் சித்த பலமுமிருக்குமாயின் இவ்வபவாதம் நிலை நிற்கமாட்டாது. மேஸ், பரோஸ் துரை வித்தியாகர்த்தராயிருந்த காலத்தில் கருமங்கள் செவ்வே நடைபெறத்தக்க முறையாக விருந்தனவென்பதுண்மையே. அவரே வித்தியா தானகாரர். நமது தற்கால வித்தியாகர்த்தரோ கிருபனதிருஷ்டியுடையவர். அரசினராயினும் கிறிஸ்த பிரசாரகராயினும் நம்பொருட்டு எதை செய்வாரோ செய்யாதொழிவாரோ அதனை நம்பாது நாங்கள் செய்து முடித்தலே அவசியமாமென்ன நான் முன்னரே பேசியதை இது நன்கு விளக்குகின்றது. தமிழர்களாகிய நமக்குத் தற்காலம் சென்னைச் சர்வகலாசாலையையே உரியதாகக் கொள்ளல் வேண்டுமென்பதற்குப்போந்த நியாயமுளதென நான் முழுதும் நம்புகின்றேன். இலங்கைக்கொரு சர்வகலாசாலை வேண்டுமென்னும் விஷயத்தில் யானும் பூரண விருப்புடையேன். அதுவும் உசிதமான முறைப்படி தொடங்கப்படுதல் வேண்டும். லண்டன் சர்வகலாசாலையின் பிரதிரூபத்தையே கொழும்பு நகரில் ஸ்தாபனஞ் செய்ததாக முடிதலாகாது. அங்ஙனம் அது சித்தியாகும்வரை சென்னைச் சர்வகலாசாலையையே நமது ஆசைக்கெல்லையாக்கிக் கொள்வோம்.

உந்நத நிலையடைந்த தமிழ் மக்களுள்ளே அறிவு விளக்கத்துக்குச் சென்னை இருதயஸ்தானமாகவுள்ளது. அங்கே எங்கள் வித்தியார்த்திகள் சேகரிக்கும் ஒழுக்கவுதார நோக்கங்களாற் பெரும்பயனடைவார்கள். வித்தியா விஷயத்தைப் பற்றி இயன்றதெல்லாஞ் சொல்லிவிட்டேன். நெடுநேரமாக யான் செய்த பிரசங்கத்தால் உங்கள் பொறுமைக் குணத்தைப் புண்படப் பரீக்ஷித்தமைக்கஞ்சுகின்றேன். அதனைப் பொறுத்தருளுமாறு உங்களை வேண்டுகின்றேன்.

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|
| 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டம் .. | 0 45 | 1 10 |
| 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க, முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வக்புகள் சட்டம் .. | 0 85 | 0 20 |
| 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்கம், ஒத்துழைப்புச் சங்கங்களின் அமைப்பு முறையும் அதிகரிப்பையும் பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திரட்டித் திருத்துவதற்கான சட்டம் .. .. | 0 25 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கச் சட்டம் ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 20 |
| கிராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 148)—மறுபதிப்பு .. | 1 30 | 0 25 |
| 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்கம், கிராம சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 1953 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் .. | 0 35 | 0 15 |
| 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கச் சட்டம் கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் .. .. | 0 45 | 0 20 |
| 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டம்—நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித்திரட்டுவதற்கான சட்டம் .. | 1 10 | 0 20 |
| 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் .. | 1 50 | 0 20 |
| 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக விவாகரத்து (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| அத்தியாயம் 104 தத்துவப் பத்திரங்கள் .. .. | 0 20 | 0 10 |
| அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் .. .. | 0 40 | 0 10 |
| 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் .. | 1 35 | 0 20 |
| 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. | 0 15 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. | 0 10 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—தாங்கள் செய்துவரும் வேலைக் கிரமத்திற் சேதமடையும் வேலையாட்களுக்கு நஷ்ட பூர்த்திப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. | 0 35 | 0 20 |
| 1935 ம் ஆண்டில் ஏற்படுத்திய வேலையாட்கள் நஷ்ட பூர்த்தி விஷய ஒழுக்க விதிகள் .. .. .. | 0 35 | 0 20 |
| அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் (1938 ல் திருத்தியமைக்கப்பட்டது) .. | 1 30 | 0 35 |
| 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்தலுக்காகவும் பராதீனப்படுத்துதலுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கான சட்டம் .. .. | 0 55 | 0 35 |
| 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்கச் சட்டம்—ஊர்ச்சங்கங்கள் .. | 2 90 | 0 35 |
| 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம்—வேலையாட்கள் சம்பளச் சங்கச் சட்டம் .. .. .. .. | 0 50 | 0 20 |
| அத்தியாயம் 95, கலியாணப் பதிவுத் சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க கலியாணப் பதிவுச் திருத்தச் சட்டம் | 0 50 | 0 10 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.